# முகடு

Mukadu

“தமிழ் எங்கள் உயிருக்கு மேல்”

இருமாத இலக்கிய இதழ். ஆடி - ஆவணி 2016 ஓலை – 12




## சிறப்பு வெளியீடு !

# தமிழ் இலக்கிய இளைஞர் பேரவையின் கொள்கை விளக்கமும் பங்களிப்புக் கோரலும்

பிரான்சு தமிழ் சமூகச் சூழலில் எண்ணற்ற தமிழ் அமைப்புக்கள் இயங்கி வரும் நிலையில்,அவர்களின் இயக்க நிலைகளுக்கு அப்பால்,தமிழ் சமூகத்திற்க்கு தேவையானதும் கட்டாயமானதுமான இயங்கு நிலையை வரையறுத்து செயல்வீச்சுடன் கூடிய ஓர் அமைப்பாக "தமிழ் இலக்கிய இளைஞர்பேரவை" 26-06-2014 அன்று உருவாக்கம் பெற்று அதன் செயற்பாடுகள் கிரம ஒழுங்கில் முன்னோக்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது

ஜனநாயகத்திற்கான பயணத்தில் இலக்கியம் ஓர் அங்கமாகும். இலக்கியங்கள் ஜனநாயகத்தின் வரலாற்றை தலைமுறை கடந்து பரிமாற்றுவதற்கும் சமூகங்கள் நல் இணக்கத்தோடு ஒன்றி வாழ்வதற்க்கும் ஓர் சிறந்த ஊடகமாகும். இலக்கியம் இன்றி மெய்யான ஜனநாயகப்பாதையை அறிந்துவிடமுடியாது, என்ற தத்துவத்தின் கீழ், பிரான்சு வாழ் தமிழ் இளையவர்களால் ஓர் இலாப நோக்கமற்ற ஜனநாயக நிறுவனக்கட்டமைப்பாக தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை கட்டமைக்கப்பட்டது.

நோக்கம்,

*இளம் தமிழ் தலைமுறையின் கலை இலக்கியம்,கலாசாரம்,பண்பாடு,விளையாட்டு, வாழ்கைத்தரம்,சமூகநலன்களை பராமரித்தலும் வளர்த்தலும்.
*பிரான்சு சமூகத்தோடு தமிழ் சமூகத்தை ஒன்றிணைத்தலும் சமூக நல் இணக்கத்தை பேனல்.
*இருட்டடிக்கப்படும் தமிழர் வரலாற்றை காத்தல்.

தற்போது எமது அமைப்பானது இரு மாதங்களுக்கு ஒரு முறை "**முகடு**" என்னும் இலக்கிய இதழை வெளியிட்டு வருகின்றது. இது வரைக்கும் பதினொரு இதழ்கள் வெளிவந்துள்ளன.இனிமேலும் தொடர்ந்து வெளிவரும். இது தவிர இலக்கிய சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள், நூல் வெளியீடுகளையும் செவ்வனே செய்துள்ளது.

இதன் செயற்பாட்டு வீரியத்தை மக்கள் மன்றுக்கு எடுத்து செல்லும் முகமாக 31-07-2016 அன்று "தமிழ் இலக்கியமும் மக்களின் போக்கும்" எனும் தொனியில் நிகழ்வொன்றை நடாத்த தீர்மானித்துள்ளோம்.

இந் நிகழ்வு மக்களுக்கும் இலக்கியத்துக்குமிடையிலான அந்நியத்தன்மையை முழுமையாக நீக்கும் என்று முழு அளவில் நம்புகிறோம்.

தமிழ் சமூகத்தின் நலன்காக்கும் உங்களிடம் இந் நிகழ்வுக்கு பங்களிப்பு செய்யுமாறும்.பங்குபற்றி நிகழ்வை சிறப்பிக்குமாறும் அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

நன்றி
தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை
பிரான்சு

## பேர்கள் வரலாற்றை நீட்டிச்செல்கின்றது

உண்மை எவ்வளவு ஆற்றலோடு இயங்கினாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனம் மனிதனுக்குள் அந்நியப்பட்டுத்தான் இருக்கின்றது.

ஆனாலும் போர்வாழ்வின் அனுபவங்கள் எழுத்துப்பிரதிகளாக, நாளந்தம் உற்பத்தியாகி கொண்டிருக்கின்றது. அவ்வாறாக உற்பத்திக் குள்ளாகும் எழுத்துக்கள் எத்தனை சதவீதம் உண்மையை காண்பிக்கின்றன என்பது ஓர் பெரும் கேள்வியே.

சமகாலத்தில் எழுதப்படும் ஈழம் சார்ந்த எல்லா எழுத்துப்பிரதிகளும் பெரும் வாசிப்பனுபவம் உள்ளவர்களால் முழுமையான வாசிப்புக்குட்படுத்தி, அப்பிரதியின் கருத்துருவாக்கத்தை பெரும் விவாதத்திற்கு உள்ளாக்கி, உண்மையை ஊருக்கு அடையாளப்படுத்த வேண்டிய தேவை கட்டாயமாக உள்ளது.

அந்தவகைவில் முகடு இதழ் **“திறந்த வாசக மனம்”** எனும் தொனிப்பொருளில் நீங்கள் வாசித்த சமகால ஈழத்து இலக்கியப்பிரதிகள் மீதான உங்கள் வாசிப்பனுபவத்தை எழுத்து வடிவில் வேண்டி நிற்கின்றது. நீங்கள் பதிவாக்கும் ஒவ்வொரு தரவுகளும் எதிர்கால வரலாற்றுத் தெளிவுக்கு பெரும் பங்காற்றும் என்பதை நினைவு கூறுவதோடு முகடு இதழ் எப்போதும் இளம் படைப்பளிகளுடன் பயணிக்கும் .

**உங்கள் அனுபவங்களை mukadu.editer@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் நீங்கள் அனுப்பும் கருத்துப்பதிவுகள் தொடர்ந்து வரும் முகடு இதழில் வெளிவரும்.**

“முகடு இளைஞர்களின் இலக்கியத்துடிப்பு”

## முகடு இரு மாத இலக்கிய இதழ்

ஆசிரியர் குழு

யோகு அருணகிரி
நி .வனஜன்
ப. பார்தீபன்
சு.கார்வண்ணன்

இதழ் வடிவமைப்பு

நி . வனஜன்
ப .பார்தீபன்

ஒப்பு நோக்குனர்

சு.கார்வண்ணா

**ஒரு மனிதனின் சுயமான ஆழ்ந்த சிந்தனைக்கும் அவன் கூரிய அவதானிப்புக்கும் எந்த புத்தகமும் மாற்றாக முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் மற்றவர்களின் பார்வையில் எழும் கருத்துக்கள் ஆய்வுகள் அனுபவங்கள் யாவும் தாம் வாழ்தல் எனும் அடிப்படையிலே எழும் விடயங்கள் அவை நமக்கான சிந்தனை அல்ல**

*“அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தந்நோய் போல் போர்றாக்கடை ”*

தொடர்புகளுக்கு

mukadu.editer@gmail.com

**தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**

**http://www .facebook .com / pages/தமிழஇலக்கிய இளைஞர் பேரவை**

**பதிவு எண் :- W912009128**

http://www.mukadu.com

“படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே உரித்துடையவர்கள்”

# பருந்துகள் பறந்துகொண்டிருக்கின்றன

டானியல் அன்ரனி



மதியம் கடந்து விட்டது. அப்படியிருந்தும் வெயில் தணியவில்லை. சவிரிமுத்தர் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தார். அவருடைய கையில் ஒன்று வழுக்கை விழுந்த தலையில் இருந்தது. முன்னோக்கிப் பெருத்திருந்த தொந்தி பெருஞ்சுமையாகக் கனக்க மூச்சு இரைக்க இரைக்க பிரதான ஒழுங்கையில் திரும்பினார். எதிரே ஜீப் வண்டியொன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. ஜீப்பைக் கண்டதும் மரநிழலில் ஒதுங்கும் பாவனையில் கானோரத்தில் நின்ற பூவரச மரத்தடியில் நின்று கொண்டார்.

ஜீப் வண்டி அவரைக் கடந்து எதிர்த்திசையை நோக்கி வேகமாக விரைந்து கொண்டிருந்தது. கடந்து செல்லும் வேகத்திலும் கூட சவிரிமுத்தர் அவனைப் பார்த்து விட்டார்.இரு பொலிஸ்காரர்களுக்கிடையில் பெருமாள் இருந்துகொண்டிருந்தான். அவனுடைய பெரிய கண்கள் சவிரிமுத்தரைக் கண்டு கொண்டதும் எதையோ அவசரத்துடன் கேட்க எத்தனிக்கும் வேளையில் வண்டி வெகுதூரம் சென்றுவிட்டது அவனுடைய கண்கள். அவை பார்த்த பார்வை. சவிரிமுத்தரின் மனதில் ஏதோ ஒரு உறுத்தல்.உடலில் ஒரு கணசிலிர்ப்பு. இனம்புரியாத இரைச்சல்கள் சோர்வுடன் நடந்தார்.

**“அவன் கள்ளத் தோணியெண்டு யாரோ பொலிசுக்கு பெட்டிசம் போட்டிட்டாங்களாம். அதுதான் அவனை வந்து இழுத்துக் கொண்டு போறாங்கள். ஏனெண அவன இனிமேல் விடமாட்டாங்களா?”**

ஒழுங்கை நிறைய சனங்கள். படலை வாசல்களிலும் வேலிகளுக்கு மேலாலும் இன்னும் பலர் ஜீப் வண்டி சென்ற திசையை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். தங்களுக்குள் எதையோ பேசி விமர்சித்துக் கொண்டு அனுதாபப் பட்டுக்கொண்டிருந்தனர். எதையுமே கண்டுகொள்ளாதவராக சவிரிமுத்தர் நடந்து கொண்டே இருந்தார்.

வெய்யிலில் நடந்து வந்த களைப்பில் உடம்பு வேர்வையால் நனைந்திருந்தது. அணிந்திருந்த மேற்சட்டையை களைந்து போட்டுவிட்டு சரு சருவென சடைத்து ரோமங்கள் வளர்ந்திருந்த வெறும் உடம்பை ஆசுவாசத்துடன் அங்கிருந்த ஈசிச்செயரில் சாய்த்துக் கொண்டார்.

கழுத்தில் இரட்டை வடம் சங்கிலி கனத்தது. விரல்களில் கற்கள் பதித்த மோதிரங்கள்.கருங்காலித் தடிக்கு பவுண் போட்டது போல் மினுமினுத்துக் கொண்டிருந்தன.

ஆனாசி... ஆனாசி.... இவன் செல்லையா வந்தவனோ?

சவிரிமுத்து போட்ட சத்தத்தில் குசினிக்குள் இருந்தவள் வெளியே வந்தாள்.ஏன் இப்பிடி சத்தம் போடுறீங்க. இப்பதான் அவன் கொண்டுவந்து வச்சிற்றுப் போறான். சாருக்குள்ளதான் இருக்கு...

அதை எடுத்துக் கொண்டு வா....

ஆனாசி விசுக்கென்று சாருக்குள் சென்றாள். வரும்போது அவள் கையில் இருந்த போத்தல்களில் கள் நிரம்பியிருந்தது.சவிரிமுத்தரின் காலடியில் வைத்துவிட்டு இவள் மறுபடியும் குசினிக்குள் போய்விட்டாள்.

சவிரிமுத்தர் கோப்பையில் சிறிது கள்ளை வார்த்து பக்கத்தில் வைத்துவிட்டு புகையிலையைக் கிழித்து சுருட்டத் தொடங்கினார். அவருடைய சிந்தனை எதிலோ லயித்திருந்தது.

என்னங்க ஒரு விஷயம் கேள்விப் பட்டீங்களோ?. நம்மளோட தொழிலுக்கு நிண்ட பெருமாளையல்லோ பொலிஸ்காரங்கள் பிடித்துக்கொண்டு போறாங்க. குசினிக்குள் இருந்து ஆனாசியின் சத்தம் கேட்டது.

நானும் வழியில பார்த்துக் கொண்டுதான் வாறன். என்ன நடந்ததாம். சவிரிமுத்தர் உணர்ச்சியின்றிப் பேசினார்.

அவன் கள்ளத் தோணியெண்டு யாரோ பொலிசுக்கு பெட்டிசம் போட்டிட்டாங்களாம். அதுதான் அவனை வந்து இழுத்துக் கொண்டு போறாங்கள். ஏனெண அவன இனிமேல் விடமாட்டாங்களா?

ஆனாசி வெளியே வந்து சவிரிமுத்தருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டாள். சவிரிமுத்தர் மனைவியை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தார். மௌனமாக கோப்பையிலிருந்த கள்ளை எடுத்து ஒருதடவை உறிஞ்சினார். அந்த மூச்சிலே கோப்பை முழுவதும் காலியாகி விட்டது.

ஆனாசிக்கு அதிசயமாக இருந்தது. இவ்வளவு பெரிய செய்தியைச் சொல்லியும் புருஷன் அக்கறைப்படுத்துவதாக தெரியவில்லை.

ஏனெண உங்களுக்கு பொலிசில இருக்கிற பெரியவங்களத் தெரியுந்தானே? ஓருக்காய்ப் போய் என்னெண்டுதான் பாத்திட்டு வாங்கோவன்....

சவிரிமுத்தர் மறுபடியும் கள்ளை வார்த்து ஒரு முறடை உறிஞ்சி விட்டு கள்ளில் தோய்த்து விட்ட பெரிய மீசையை தடவி விட்டுக் கொண்டார்.

பேச்சி இதுகள் ஒண்டும் உனக்கு விளங்காது. என்னமாதிரித்தான் தெரிஞ்சவங்களெண்டாலும் லேசில இந்தமாதிரி விசயங்களை விடமாட்டாங்கள்.

ஆனாசி அதற்கு மேல் எதுவும் பேசாமல் போய்விட்டாள். சவிரிமுத்தர் சுற்றிவைத்திருந்த சுருட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தார். ஆனாசி கேட்டதற்காக ஏதோ சொல்லி வைத்தார். ஆனால்

அவருடைய மனதில் பெருமாளின் விடயம் உறுத்திக் கொண்டிருந்தது கண்களை மூடிக்கொண்டார்.

சவிரிமுத்தருக்கு நன்றாக நினைவிருந்தது. பத்து வருடங்களுக்கு முன் ஒரு வெள்ளிக்கிழமையாய் இருக்கவேண்டும். தோணிக்காசுக்கு கொழும்புத்துறைக்குப் போவதற்காக யாழ்ப்பாண பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுதுதான் பெருமாளை சந்தித்தார்.

அவனுக்கு அப்போது பத்து வயதிருக்கும் கறுத்த மேனி. ஊதி மினுமினுப்புடன் இருந்த வயிறு சிக்குப் பிடிக்காத தலைமயிர் காவி படிந்து முன்னோக்கி மிதந்து கொண்டிருந்த பற்கள். பெரிய கண்கள். பீத்தல் விழுந்த துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டு பஸ்கியுவில் நின்றவர்களிடம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அவனைக்கண்டதும் சவிரிமுத்துக்கு ஆனாசியின் நினைவு வந்தது. வெகுநாட்களாகவே வீட்டு வேலைக்கு ஒருவர் வேண்டுமென்று நச்சரித்துக் கொண்டிருந்தாள். இவருடைய வலைக்கும் ஆள் பற்றாக்குறையாக இருந்தது.

'தம்பி.... இஞ்சால உன்னத்தான் இஞ்ச வா....

பெருமாள் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் என்ன வென்று விரித்துரைக்க முடியாத பாவம். அவன் சவிரிமுத்தர் அருகே வந்தான்.

'தம்பி உன்ரை பேரென்ன...

'பெருமாளுங்க...

'எந்த ஊர் மோன உனக்கு

'பதுளையிங்க...

'அப்ப வாச்சுப் போச்சு என்று

மனதிற்குள் நினைத்தபடி சவிரிமுத்தர் தொடர்ந்தார்.

'அப்பா.... அம்மா.... இல்லையோ?

'அப்பா.... செத்துப் போட்டாரு. அம்மா தங்கச்சி தோட்டத்திலே வேலை செஞ்சிக்கிட்டு இருக்கிறாங்க..

'ஏன் உனக்குத் தோட்டத்திலே வேலை செய்யப் பிடிக்கேல்லையா?

'என்னோட வீட்டுக்கு வாறியா...? உனக்கு சாப்பாடு தந்து உன்ர வீட்டுக்கும் காசு அனுப்பிறன்

- தயக்கம்.

'ம்... சொல்லன்

சரியிங்க....

அவன் சம்மதித்து விட்டான்.

பெருமாள் வீட்டுக்கு வந்த போது சம்மாட்டி சவிரிமுத்து சாதாரண சவிரிமுத்துவாகத்தான் இருந்தார். பெருமாள் வீட்டில் எடுபிடி வேலைகளைக் கவனித்ததுடன் வலையில் பிடித்து விற்றதுபோக ஐஸ் போட்டு வைத்தல் போன்ற வேலைகளையும் கூட இருந்து செய்வான்.

அந்தத் தெருப்பிள்ளைகள் எல்லாரும் அவனுக்குச் சினேகிதர். அவனுடைய வயதுக்கு மூத்த அனுபவ அறிவும், அதனால் அவன் பேசும் பெரிய விசயங்களையும் ஆச்சரியத்துடன் கேட்பார்கள், கூட விளையாடும் சிறுவர்கள். எப்போதாவது அவர்களுக்குள் சண்டை மூழும். அவனைப் பார்த்து 'கள்ளத்தோணி என்று பட்டம் சொல்லுவார்கள். ஆனால் அவன் அந்த வார்த்தையின் அர்த்தத்தைப்புரிந்து கொள்ளாதவன் போல உண்மையில் அவனுக்குப் புரியாமல் கூட இருக்கலாம்.- பேசாமல் இருப்பான். ஆனால் 'கரிக்கோச்சி என்று மட்டும் அவனை யாரும் பேசி விட்டால் போதும் கோபம் தலைக்கேற, மூர்க்கத்துடன் - சொன்னவனை வளைத்துப் பிடித்து முதுகில் ஒரு அறை கொடுக்காமல் அடங்கமாட்டான். பற்களை 'நறநற வெனக் கடித்துக் கொண்டு பெரிய விழிகளைப் பயங்கரமாக உருட்டுவான். வாயில் வந்த தூசண வார்த்தைகளை எல்லாம் கொட்டிக்கொள்வான். சிலவேளைகளில் துண்டு பீடிகளைப் பொறுக்கி வீட்டுக் கொல்லைப் புறத்தில் நின்று குடிப்பதைச் சவிரிமுத்தர் கண்டிருந்தாலும் எதுவும் சொல்லுவதில்லை. ஏதாவது ஏசினால் ஓடிப் போய்விடுவான் என்றபயம். அவருக்கு அவனது சுறுசுறுப்பும் பிடித்திருந்தது.

சிலநாட்களில் பெருமாள் சவிரிமுத்துவுடன் கடலுக்குப் போகத் தொடங்கி விட்டான். தோணியில் பெருமாள் கால் வைத்தவேளை 'விடுவலையில் கயல் மீன்அள்ளிச் சொரிந்தது. சில வருடங்களிலேயே சவிரிமுத்து பல லட்சம் பெறுமதியான தோணிகளுக்கும், நைலோன் வலைகளுக்கும் அதிபதியாகி ஊரில் பெரிய சம்மாட்டி ஆகிவிட்டார்.

மலைப்பாறையில் பிறந்து கடல் உவரில் ஊறிய பெருமாளின் உடல் உருண்டு திரண்டு தசைக்கோளங்கள் புடைத்து நிற்கும் பருவத்தை எட்டிவிட்டான் பெருமாள் அவன் உழைத்த பத்து வருடங்களிலும் வயிறு நிறையச் சாப்பாடு. ஒரு நாளைக்கு இரண்டு கட்டு பீடி, ஞாயிற்றுக் கிழமைகளில் சினிமா பார்க்கக் காசு ... இவைதான் அவன் உழைப்புக்குக் கிடைத்தவை.

பத்து வருடங்களாக தாய் சகோதரியை காணாமல் மறந்திருந்த பெருமாளுக்கு சில நாட்களுக்கு முன் திடீரென ஏனோ ஊருக்கு போக வேண்டுமென்று மனம் பேதலித்தது. வேட்கை கொண்ட மனதின் விருப்பத்தை சம்மாட்டியாரிடம் வெளியிட்டு, ஐநூறு ரூபா காசு கேட்டான். சுரண்டிப் பிழைத்து சொகுசு அனுபவித்துப் பழக்கப்பட்டுவிட்ட சவிரிமுத்துவுக்கு இது பேரிடியாகிவிட்டது. பெருமாள் செய்யும் வேலையின் பழு, அவனை இழந்தால்... அவன் திரும்பிவராவிட்டாலும்...? அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. இதனால் பல நாட்களாக கடத்தி வந்தார்.ஒவ்வொரு நாளும் பெருமாளின் ஊமை முணுமுணுப்பு இரைச்சலாகி வெடித்தது. ஒருநாள் ஊதியம் எதுவுமின்றியே வெளியேறிவிட்டான்.

அடுத்த நாள் சவரிமுத்துவின் பரம விரோதி பேதுருவின் நைலோன் வலையில் சேர்ந்து விட்டான் என்ற செய்தியை சவிரிமுத்து அறிந்தபோது அதிர்ந்தே போய் விட்டார்.

- அந்தப் பெருமாள் இப்பொழுது பொலிசில்.

'என்ன சம்மாட்டியார் கனக்க யோசிச்சுக் கொண்டிருக்கிறீங்க.

அப்பொழுதுதான் வாசல் படியைத் தாண்டி வந்து கொண்டிருந்த குத்தகைக்காரன் யோணின் இன்னொரு கோப்பைக்குள் ஊற்றி அதைக் குத்தகைக்காரனிடம் நீட்டினார்.

'என்ன விசயம் குத்தகை... இந்த மத்தியான நேரத்தில? சவிரிமுத்து வினவினார்.

'ஒண்ணுமில்லை சம்மாட்டியார்... நேற்று சுவாமியார் கூப்பிட்டு இந்த முறை பெருநாள் நல்ல முறையில கொண்டாட வேணும் எண்டு சொன்னார்.

'ஓ... அதுக்கென்ன... சிறப்பாகச் செய்வம்.

சொல்லிக் கொண்டே சவிரிமுத்து கோப்பை முழுவதையும் காலி செய்துவிட்டு, மறுபடியும் கோப்பையை நிரப்பினார்.

குத்தகைக்காரர் மீண்டும் தொடர்ந்தார்.

'இந்த முறை வழமைபோல் கோயில் சோடினைகள், வெடி, மத்தாப்பு எல்லாம் உங்க பொறுப்பு.... குத்தகைக்காரர் இப்போது தானே போத்தலை எடுத்து நிரப்பிக்கொண்டார்.

'அதுக்கென்ன இந்தமுறை வாற ஒரு கிழமை உழைப்பை அப்படியே ஒதுக்கிவிடுறன்.
கோப்பையை நிரப்புவதும் வெறுமையாக்குவதுமாய் சில நிமிடங்கள். சவிரிமுத்துவுக்கு சற்று ஏறிவிட்டது. குத்தகைக்காரர் நிதானத்துடன் பேசினார்.

'ஒரு விஷயம் கேள்விப்பட்டியளோ... உங்களை விட்டுப்போட்டு பேதுருவட வலைக்குப்போன அவன் தான்... பெருமாள், அவனைக் கள்ளத்தோணியெண்டு பெட்டிசம் போட்டு பொலிசட்டைப் பிடிச்சுக் கொடுத்துப் போட்டாங்களாம் ஆரோ... 'ஓம் ஓம்... நானும் வழியில பாத்தன். பாவம் பெருமாள். நல்ல பெடியன். சவிரிமுத்து அரைமயக்கத்துடன் அனுதாப வார்த்தைகளைக் கொட்டினார்.

'அப்ப நான் வரப்போறன் சம்மாட்டி என்று கூறிக்கொண்டே குத்தகைக்காரர் எழுந்து மெதுவாக நடந்தார்.
சவிரிமுத்து ஒரு நமட்டுச் சிரிப்புடன் அண்ணாந்து பார்த்தார். பருந்துகள் எதையோ தேடிப்பறந்து கொண்டிருந்தன.

# துரோகத்தில் சிவந்த தொடுவானம்...

விடிவை விரும்பாத மேகங்கள்
எல்லாப் பொழுதுகளிலும்
சூரியனைச் சூழ்ந்துகொள்கின்றது

உச்சவகாலங்களில் பூசாரிகள்
மூர்த்தியின் பெயரால்
பக்தனின் கண்ணில் அலங்கார அருள் காண்பிக்க
பழைய தோணி
துடுப்புகள் உடைக்கப்பட்டு
பயணத்தில் கரையொதுங்குகிறது

தொடங்குவது
தொடங்கியதை தொடர்வது
தொடர்ந்ததை கைவிடுவது பின்
தொடங்குவது என
துயரத்தின் பாதையில்
துரோகங்கள் வலி உமிழ்கிறது

சுய இலாபப் பித்தர்களால்
நடைமுறையில்
அவநம்பிக்கைகள் கூடி
சந்தேக முடிச்சுக்கள் மீதான
உண்மை குறித்த தேடல்
எல்லோர் நினைவிலும் மெய்யானது.

**ப.பார்தீ**

# பிறந்தநாடு...

பேரிடியாய் ஆனதென்று
புலம் பெயர்ந்தோம்
பிறந்த மண்ணில்
புலன் ஒடுக்கி வாழ்ந்த நாம்
புகுந்த மண்ணில்
புழுகத்தோடு சுதந்திரமாய்
அகம் முழுக்க ஆயிரம் கவலை
அடங்கிக் கிடந்தாலும்
புன்னகைத்து வாழ்ந்திருந்தோம்
புதிதாக வரும் சேதி ஒவ்வொன்றும்
புல வாழ்வையும்
புயல் போல ஆட்டுதின்று.

**ஈழத்துப்பித்தன்**



கோமகன்

இன்றைய சமகாலத் தமிழ் இலக்கிய ஆளுமைகளில் திறனாய்வு, நாடகங்கள், கட்டுரைகள், வரலாறு, சஞ்சிகைகளின் ஆசிரியர் என்று பன்முக அடையாளங்களுக்குச் சொந்தக்காரர் பேராசிரியர் . அ .ராமசாமி. ஆரவாரங்கள் இன்றிச் செயலால் பலத்த அதிர்வலைகளை இவர் தமிழ் இலக்கியப்பரப்பில் ஏற்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இதுவரையில் இவரின் படைப்புகளாக நாடகங்கள் விவாதங்கள், ஒத்திகை, வட்டங்களும் சிலுவைகளும், சங்கரதாஸ் சுவாமிகள், பிரஹலாதா, முன்மேடை, தொடரும் ஒத்திகைகள், அரங்கியல் மற்றும் நாடகவியல் என 8 நூல்கள் அச்சில் வந்துள்ளன. ஊடகங்களால் கட்டமைக்கப்படும் வெகுமக்கள் பண்பாடு மற்றும் பிம்பக்கூறுகள் பற்றிய விமரிசனக்கட்டுரைகள் கொண்ட தொகுதிகளாக-பிம்பங்கள்அடையாளங்கள்,வேறுவேறுஉலகங்கள்,திசைகளும்வெளிகளும்,மறதிகளும் நினைவுகளும் என நான்கு நூல்கள் வந்துள்ளன. திரைப்படங்களைப் பார்ப்பதற்கான பார்வைகளை முன்வைக்கக்கூடிய வகையில் அலையும் விழித்திரை, தமிழ் சினிமா: ஒளிநிழல் உலகம், ரஜினிகாந்த்: மாறும் காட்சிகள், தமிழ் சினிமா: அகவெளியும் புறவெளியும்,தமிழ் சினிமாள் ஷ: காண்பதுவும் காட்டப்படுவதுவும் முதலான தொகுப்புகள் வந்துள்ளன. இலக்கியத்திறனாய்வுகளாக மையம் கலைந்த விளிம்புகள், திறனாய்வு: சில தேடல்கள், நாயக்கர் காலம்: இலக்கியமும் வரலாறும் முதலான நூல்கள் வந்துள்ளன. நாவலென்னும் பெருங்களம், கதைவெளி மனிதர்கள் என முறையே நாவல்,சிறுகதை பற்றிய திறனாய்வுக் கட்டுரை நூல்கள் இப்போது வரப்போகின்றன. 2000 -க்குப் பின்பான பெருந்தொகுப்புகளில் இவரது கட்டுரைகள் இடம் பெற்று வருகின்றன. தமிழில் நவீன இலக்கிய விவாதங்களை முன்னெடுக்கும் உயிர்மை, அம்ருதா, தீராநதி, காலச்சுவடு, புதிய கோடாங்கி, தலித், மணற்கேணி போன்ற அச்சு இதழ்களிலும் எதுவரை, மலைகள், சொல்வனம் போன்ற இணைய இதழ்களிலும் தொடர்ந்து எழுதும் இவர் தனது கட்டுரைகளை "அ.ராமசாமி எழுத்துகள்" (http://ramasamywritings.blogspot.in/) என்னும் வலைப்பூவில் தொகுத்து அளித்துக் கொண்டிருக்கிறார். அவரோடு முகடு வாசகர்களுக்காக நான் கண்ட நேர்காணல் இது .



# “சாகசக்காரர்கள் எப்போதும் விமசர்னங்களுக்குச் செவிசாய்க்க மாட்டார்கள்’ -பேராசிரியர் அ.ராமசாமி-இந்தியா.”

## அ.ராமசாமியை நாங்கள் எப்படித்தெரிந்து கொள்ள முடியும் ?

திறனாய்வுக்கலையை மையப்படுத்தி எழுதும் எழுத்தாளன் என்றும் நவீனத் தமிழ் வாசிப்பைக் கல்விப்புலத்திற்குள் அதனதன் தோற்றக்காரணிகளோடு பரப்பிவிட வேண்டும் என நினைக்கும் கல்வியாளன் என்றும் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்ற ஆசைப்படுகிறேன். பலரையும்போல கவிதை எழுதுவதில் தான் தொடங்கினேன். கதைகள் கூட எழுதியிருக்கிறேன். தேன்மழை, தாமரை, கணையாழி, தீபம், மனஓசையெனத் தொடங்கிய பயணத்தைத் தடுத்து நிறுத்தியது முனைவர் பட்ட ஆய்வு. புனைவு மனம் குறைந்து அறிவுவழிப்பட்ட தர்க்கம் மனத்தை ஆக்கிரமித்துவிட்டது. புதுவைப் பல்கலைக்கழகத்தில் நாடகத்துறையில் சேர்ந்தபோது மாணவர்களின் தேவைக்காக நாடகங்களை உருவாக்கத்தொடங்கினேன். கதைகளிலிருந்து கவிதைகளிலிருந்து - மொழிபெயர்ப்பாக -தழுவலாகவெனக் குறுநாடகங்களையும், பெருநாடகங்களையும் உருவாக்கித்தந்தேன். மேடைக்கான நாடக எழுத்தென்பது ஒருவிதத்தில் உருவாக்குவதுதான். அது தொடங்கி நவீனத்துவ தர்க்கம் இடம்பெறும் நாடக எழுத்தாளனாகவும் தர்க்கத்தை முன்வைக்கும் கட்டுரை எழுத்தாளனாகவும் இப்போது அறியப்படுகிறேன். முனைவர் பட்ட ஆய்வுக்காக மார்க்சியத்தின் அடிப்படையிலான இலக்கியத் திறனாய்வுகளை வாசிப்பவனாக இருந்தேன். அங்கிருந்தே எனது இலக்கியப்பார்வை உருவாகியது. ஆய்வுக்காகக் கடந்தகால இலக்கியப் பிரதிகளுக்குள் சமூக நிறுவனங்களின் பதிவுகள், அவற்றின் இயக்கம், முரண்களின் வெளிப்பாடு ஆகியவற்றைப் பார்க்கும் பார்வையை உருவாக்கிக் கொண்டேன். அதிலிருந்து நகர்ந்து நிகழ்காலப் பண்பாட்டை உருவாக்கும் காரணிகளைப் பற்றிப் பேசும் விமரிசகனாக நானே என்னை நினைத்துகொள்கிறேன். குறிப்பாக 2000 -க்குப்பின்னான காலகட்டத்தில் வெகுமக்கள் ஊடகங்களின் வெளிப்பாட்டு வடிவங்களான திரைப்படங்கள், தொலைக்காட்சித் தயாரிப்புகள், பேச்சுக்கச்சேரிகள் எனப் பலவற்றின் வழியாக உருவாக்கப்படும் சமூகக்கட்டமைப்பைப் புரிந்துகொள்ள உதவும் விமரிசனக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதுகிறேன். அதற்கான விதிகளோடு உறவும்முரணும் கொண்ட இலக்கியவிதிகளிலிருந்தும் - இலக்கிய விமர்சன அடிப்படைகளிலிருந்தும் உருவாக்கிக் கொண்ட பார்வைகளே இதற்குள் செயல்படுகின்றன. அதிலும் குறிப்பாகத் தமிழின் ஆதி இலக்கியக் கோட்பாட்டு நூலான தொல்காப்பியம் உருவாக்கித் தந்துள்ள விதிகளை நவீனத்துவப் பார்வையோடு

இணைக்க விரும்பும் இலக்கிய விமர்சகனாகவும் பண்பாட்டு விமரிசகனாகவும் என்னைப் புரிந்துகொள்வதையே விரும்புகிறேன்.

"எழுத்து உன்னதம் அதைச் செய்பவனைச் சமூகமே காப்பாற்ற வேண்டும் " என நம்பும் எழுத்தாளனாக என்னைக் கட்டமைத்துக்கொள்ள நினைப்பதில்லை. நாடோடியாகவும், பொது ஒழுங்கிலிருந்து விலகியும், எனது கஞ்சிக்காக எந்த வேலையும் செய்ய மாட்டேன் என்ற பிடிவாதத்தோடு அலையும் எழுத்தாளர்களை நான் சாகசக்காரர்களாக மட்டுமே நினைக்கிறேன். சாகசக்காரர்கள் எப்போதும் விமர்சனங்களுக்குச் செவிசாய்க்க மாட்டார்கள் மக்களாட்சி மனநிலைக்கெதிரானவர்களாகவே - அராஜகவாதிகளாகவே இருப்பார்கள். அப்படிப்பட்ட எழுத்தாளர்களும் ஜனநாயக சமூகத்திற்குத் தேவை. அவர்கள் ஒருவிதத்தில் ஜனநாயக சமூகத்தின் அடங்க மறுக்கும் மனச்சாட்சி. அவர்கள் இருந்து விட்டுப்போகட்டும். நான் அப்படி அறியப்பட விரும்பியதில்லை. அதே நேரத்தில் நிலவும் அமைப்புக்கும் அதிகாரத்துக்கும் முழுவதும் ஒத்தோடுதல் ஒரு எழுத்தாளனின் வேலையல்ல என்றும் புரிந்துவைத்திருக்கிறேன்.

**இந்தியாவில் எவ்வளவோ துறைகள் இருக்கின்றன ஆனால் எழுத்து உங்களை வளைத்ததன் காரணம்தான் என்ன ?**

எழுத்து என்னை வளைத்தது என்று சொல்வது சரியானது தான். வாசிப்பின் வழியாக எழுத்தால் வளைக்கப்பட்டேன். எனது எழுத்துகளுக்கு முழுமையான காரணம் வாசிப்புதான். எனது வாசிப்பின் தொடக்கம் பெரிய எழுத்துக் கதைகள். வைணவ மரபுசார்ந்த நம்பிக்கைகள் கொண்ட விவசாயக் குடும்பம் என்னுடையது. பாரதக் கதைகளையும் இராமாயணத்தையும் வாசிப்பதை ஒரு சடங்காகவும் வாழ்வின் பகுதியாகவும் கொண்ட குடும்பம். வயதான அவ்வா (பாட்டி) மற்றும் தாத்தாக்களின் அந்திமக் காலத்தேவைக்காகவே இவற்றையெல்லாம் தொடர்ந்து வாசித்துக் காட்டியிருக்கிறேன். பாண்டவர்களின் அஞ்ஞாதவாச வாழ்வை சொல்லும் விராட பர்வத்தையெல்லாம் ஒவ்வொரு வருடமும் வாசித்துக்காட்டியவன். எட்டாம் வகுப்புக்குப் பிறகு கிறிஸ்தவப் பாதிரிகளால் நடத்தப்பெற்ற பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. விடுதியில் தங்கிப் படித்தேன். எழுவதற்கும் உண்பதற்கும் தூங்குவதற்கும் ஏங்குவதற்குமென எல்லாவற்றிற்கும் பைபிளின்ஓரதிகாரத்தைவாசித்துவிட்டுப்பிரார்த்திக்கும்கட்டாயம். பைபிள் வாசிக்கப்படும் அழகும், அதற்குள் விரியும் கதைகளும் ஈர்த்தவைகளாக இருந்தன. பைபிளையும் ரசித்துப் படித்தவன். இரண்டு சமயங்களின் கதைகளை அறிந்த நான் இரண்டின் மீதும் நம்பிக்கையற்றவனாக ஆகிப்போனது முரண்தான். பள்ளிப்படிப்பில் வரலாற்றிலும் கணித அறிவியலிலும் விருப்பம் கொண்டவனாக இருந்தேன். வரலாற்றுப்பாடம் நடத்திய ஆசிரியைகளின் பிரியத்துக்குரிய மாணவன் . நபர்களின் சாகசக்கதைகளும், ஆண்டுகளும் போலவே கணிதச் சூத்திரங்களும் எனக்குள் ஒடிக்கொண்டிருக்கும். ஐ.நா.சபையின் செயலாளர் யார்? என்ற கேள்விக்கு ' ஊதாண்ட்' பெயரைச் சொன்னபோது அவர் பதவியேற்று 15 நாள் தான் ஆகியிருந்தது. அப்போது எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். அதற்காகவே எனக்குச் சிறப்பு உதவித்தொகை கிடைத்தது. வரலாறும் கணிதமும் புனைவு குறைவான பாடங்கள். இரண்டிலுமிருந்து இலக்கியவாசிப்புக்கு நகர்ந்தவன். இலக்கிய வாசிப்பை வெளிகளின் வாசிப்பாக நினைப்பவன் என்பதை நான் எழுதும் கட்டுரைகளில் நீங்கள் பார்க்கமுடியும்.

**இரண்டு சமயங்களின் கதைகளை அறிந்த நான் இரண்டின் மீதும் நம்பிக்கையற்றவனாக ஆகிப்போனது முரண்' என்று சொல்கின்றீர்கள் அப்படியான முரண்கள் ஏற்படுவதற்கான பின்புலங்கள்தான் என்ன ?**

பார்ப்பதையெல்லாம் கடவுளாக நினைத்தும் வழிபட்டும் வாழ்ந்தவர்கள் சுற்றி இருந்தார்கள்.ஒவ்வொரு நேரமும் கடவுளிடம் கேட்டுக்கேட்டுக் காரியங்கள் செய்யும் பழக்கமும் அவர்களிடம் இருந்தது. ஆனால் குடும்பத்திற்குள் ஏதாவது சொத்து மற்றும் பணப்பிரச்சினை என்றாலும் சரி, உறவினர் என்பதால் கிடைக்கவேண்டிய மரியாதை கிடைக்கவில்லையென்றாலும் சரி அவர்கள் காட்டும் வன்மமும் பகைமையும் வஞ்சினம் கொண்டதாக அமைவதையும் பார்த்துப் பயந்திருக்கிறேன். அப்போதெல்லாம் கடவுளை மறந்துவிட்டுப் பகை வளர்ப்பார்கள். தவறாமல் நல்ல நாட்களுக்கும் கெட்ட நாட்களுக்கும் கோயில், குளம் என்று அலைவார்கள் ஆனால் உறவுக்காரர்களையே கெடுக்கவேண்டுமெனஎப்போதும்திட்டமிடுவார்கள்.இதன்மீதான கேள்விகள் எனக்குச் சின்ன வயதிலிருந்தே இருந்தன. அதனாலேயே குடும்பத்தினரிடம் பெரிய அளவு நெருக்கத்தைப் பேணியதில்லை. அதனை வளர்ப்பதுபோல எட்டாம் வகுப்புக்குப் பிறகு விடுதி வாழ்க்கைக்குள் நுழையும் வாய்ப்பு கிடைத்தது. விடுதியில் நுழைந்த நாள் முதல் போதனைகள், பிரார்த்தனைகள். எழுப்பியதும் பிரார்த்தனைக்கூட்டம், குளித்து முடித்து உணவுத்தட்டுக்கு முன் ஒரு ஜெபம், வகுப்பு தொடங்க ஒரு ஜெபம், முடிய ஒரு பிரார்த்தனை, திரும்பவும் விடுதியில் பிரார்த்தனைக்கூட்டம், ஜெபங்கள். தினசரி பைபிள் வாசிப்புகள், ஞாயிறு வகுப்புகள் எனப் பைபிளும் பிரார்த்தனைகளும் அன்றாட வாழ்வில் பகுதிகளாக மாறின. மணியடித்து அழைத்துக் கூடிப் பேசி, பாடி, இரங்கிக் கேட்டுக் கொண்டவைகளைக் காதுகொடுத்துக் கேட்கும் கடவுள் யாரென்றே தெரியவில்லை. பள்ளியில் நடக்கும் பதவிப்போட்டிகளும் ஆசிரிய - ஆசிரியைகளின் காதல்களும் கதைகளாக மாணவர்கள் வரை வந்து சேர்ந்துவிடும். கிறித்தவ சமய நடவடிக்கை சார்ந்த நிரலை உருவாக்குவதிலும் மனிதர்களை முன்னிலைப்படுத்துவதிலும் இருந்த சார்பும் அடையாளங்காணலும் கூட எனக்குள் கேள்விகளைத் தோற்றுவித்தன. எல்லாவற்றையும் ஈடுபாட்டோடு செய்தாலும் நான் அந்நியனாகவே நினைக்கப்பட்டேன். அந்த நினைப்பை விரிவாக்கியவர் ஒரு தமிழாசிரியர். பத்தாம் வகுப்பில் உரைநடைகளை நடத்துவதற்காக வந்த அவரின் பெயர் அந்தோனி. நாத்திகராக அறியப்பட்ட அவரைப் பற்றி என்னோடு படித்த அவரின் மகன் சொன்ன கதைகள் சுவாரசியமானவை. அந்தக் கதைகள் தான் பெரியாரின் பக்கம் திருப்பின. பெரியார் எழுதிய சின்னச் சின்னப் பிரசுரங்களைக் கொண்டுவருவான். அவன் வீட்டில் அப்படிப்பட்ட புத்தகங்கள் நிறைய இருப்பதாகச் சொல்வான். ராமாயண, பாரதக் கதைகளை

**“ஈழத்து வாசகர்களிடையே அல்லது படைப்பாளிகளிடையே ஜெயமோகன் சாருநிவேதா, மனுஷ்ய புத்திரன் ஆகியோரது எழுத்துக்களைப் படிப்பது அல்லது அவர்களையிட்டுப் பேசுவது ஓர் அந்தஸ்த்துக் குறியீடாக (status of sympolic) இருக்கின்றது. உண்மையில் இவர்கள் எழுத்துக்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் அதிர்வலைகளை ஏற்படுத்தினவா?”**

வாசித்திருந்த எனக்குப் பெரியார் முன்வைத்த வாதங்களோடு திரும்பவும் அவற்றை நினைத்துக்கொள்ள முடிந்தது. விளைவு அவை வெறும் கதைகளாக ஆகிவிட்டன் பைபிளும் கதைகளின் திரட்டாகத் தோற்றம் தந்தன. எல்லாவற்றையும் கதைகளாகப் பார்த்துப் பழகியே நான் நாத்திகனானேன்.

**உங்களால் இலக்கிய உலகில் சுதந்திரமாக இயங்க முடிகின்றதா ?**

இயங்கித்தான் வந்துள்ளேன். இயங்கிக்கொண்டுதான் இருக்கிறேன். அதே நேரத்தில் எனது சுதந்திரத்தின் பரப்பும் எல்லைகளும் எனக்குத் தெரியும். ஒரு கல்விப்புலப் பேராசிரியரின் எல்லைக்குள்ளிருந்து அதிகப்படியான உரிமைகளையும் சுதந்திரத்தையும் பயன்படுத்துகிறேன். நிறுவனத்தின் கட்டுப்பாடுகள் என்னை எப்போதும் தாக்கிவிடாதவாறு பார்த்துக்கொள்கிறேன். ஆனால் அண்மைக் காலத்தில் முகநூல் போன்ற சமூகவலைத்தளங்களின் வரவுக்குப் பின் அடிப்படைவாதிகளும் அறியாமையில் உழலும் ஒற்றை நோக்கம் கொண்ட மனிதர்களும் கருத்துலகில் செயல்படும் பலரைத் தொல்லை செய்யத் தொடங்கியுள்ளனர். எனக்கும் அதுப்போன்ற தொல்லைகளும் எச்சரிக்கைகளும் வருவதுண்டு. குறிப்பாகத் தமிழ்த்தேசியம் பேசுவதாக நம்பிக்கொண்டிருக்கும் அடிப்படைவாதிகளே அச்சுறுத்தலை அளிக்கின்றனர். அவர்கள் கையில் அதிகாரம் கிடைத்தால் இதுவரையிலான பாசிஸ்டுகளைத் தோற்கடித்துத் தாண்டிச் செல்வது நிச்சயம் என்று தோன்றுகிறது. மாற்றுக்கருத்தாளர்களை இயங்கவிடாமல் செய்வதில் அடிப்படைவாதம் வெற்றியடையப்பார்க்கிறது இன்னும் சொல்லப்போனால் கருத்துச் சுதந்திரம் அரசு போன்ற நிறுவனங்களால் கேள்விக்குள்ளாக்கப்படுவதைவிடச் சமூகக்குழுக்களால் தான் அச்சுறுத்தலைச் சந்தித்து வருகின்றன. திரைப்படங்களைத் தடுப்பது, பெண்ணியக் கருத்துகளைப் பேசும்விதமாகப் பெண்ணுறுப்புகளைக் கவிதையில் உச்சரிக்கச் செய்யும்போது அச்சுறுத்துவது, சாதிய முரண்பாடுகளை -சாதிய மேலாண்மைகளைக் கேள்விக்குள்ளாக்கும் படைப்புகளைத் தடுப்பது போன்ற வினைகளைச் செய்யும் குழுக்கள் தமிழகப்பரப்பில் மிதக்கத்தொடங்கியிருக்கின்றன. அதன் உறுப்பினர்கள் தனிநபர்களைச் சமூக ஊடகங்களில் நெருக்கடிக்குள்ளாக்குகின்றனர். இந்த நெருக்கடிக்காக லீனா மணிமேகலை, பெருமாள் முருகன் போன்றோர் வெளிப்படையாக அறியப்பட்டவர்கள்அச்சுறுத்தப்பட்டார்கள்.

**‘இலக்கிய வளர்ச்சிக்கு சமூக வலைத்தளங்கள் இன்றியமையாதவை என்று சொல்கின்றீர்கள். அதேவேளையில் அடிப்படைவாதக்குழுக்களும் அதன் உறுப்பினர்களும் சமூகவலைத்தளங்களில் படைப்பாளிகளை நெருக்கடிக்குள்ளாக்குகின்றனர் என்றும் சொல்கின்றீர்கள்.’ இது முரண்நகையாக இல்லையா ?**

அந்த முரண்நகையில் இயங்கியல் இருக்கிறது. நெருக்கடி இயக்கத்தைத் தடுத்துவிட முடியாது. தனிமனிதர்கள் தங்கள் செயல்பாடுகள் சமூகத்தின் வளர்ச்சிப்போக்கிற்கும் மனிதகுல நலனுக்கும் நன்மை பயக்கும் என நினைக்கும்போது நெருக்கடிகளைக் கண்டு பின்வாங்கிவிட மாட்டார்கள். எழுதுவார்கள். எழுதுவதைப் பார்வையில் வைக்கச் சமூக வலைத்தளங்களில் தடையற்ற வாய்ப்புகள் இருப்பதால் தொடர்ந்து எழுதுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். இருந்துகொண்டே இல்லாமல் போகமுடியுமா? தனது கருத்தை முன்வைக்கும் வாய்ப்பிருக்கும்போது சொல்லாமல் விடுவதென்பது இருந்துகொண்டே இல்லாமல் போவதுதானே? இலக்கியத்தரம் என்பதற்கான வரையறைதான் என்ன ? இலக்கியத்திற்கு என்று மட்டுமே தரம் இருப்பதாக நினைக்கவில்லை. பொருட்களின் வடிவம், உள்ளடக்கம், பயன்பாடு சார்ந்த தரமே அதன் முதன்மை. பருப்பொருட்கள் முழுமையும் எந்திரவியல் கூறுகளால் ஆனது. ஆனால் இலக்கியம் உள்ளிட்ட கலைகள் அப்படியானவையல்ல. எந்திரவியல் கூறுகளோடு அழகியல் கூறுகளைச் சார்ந்தே அவை அறியப்படுகின்றன. ஏனென்றால் அவை பருண்மையான பொருட்கள் அல்ல. அதேபோல் கலை, இலக்கியங்கள் உடனடிப் பயன்பாட்டை முக்கியமாக நினைப்பன அல்ல. உடனடிப் பயன்பாட்டை விடவும் நீண்டகாலப் பலனை முதன்மையாக நினைப்பவை. அந்த மையத்திலிருந்தே இலக்கியத்தரம் பற்றிய பேச்சு உருவாகிறது. அதனால் ஒருபடித்தான தரம் என்று ஒன்று இருப்பதாக நம்புவதில்லை

**இலக்கியமானது தனிய கலையுடன் நின்றால் போதுமா? இல்லை அது மனித வாழ்வியலில் பெரும் சமூக மாற்றங்களை உருவாக்கவேண்டுமா ?**

இலக்கியம் தனியொரு கலை அல்ல. அது ஓவியம், சிற்பம் போன்ற காண்பியக் கலைகளின் கூறுகளை தன்னகத்தே கொண்டது. பேச்சு, பாட்டு போன்ற கேட்புக் கலையின் ஆதாரம் இலக்கியம் தான். நடனம், நாடகம், சினிமா போன்ற இருநிலைக்கலைகளின்

தொடக்கமும் இலக்கியம் தான். ஆக, இலக்கியம் நுண்கலை, நிகழ்த்துக்கலை, அசைவுறுக்கலை என எல்லாவற்றோடும் இணைந்து நிற்கும் கலை. இவை எல்லாமே உருவாக்கும் கலைஞரோடும், அவரது வாழிடப்பரப்பு, அங்கு வாழும் மனிதர்களின் வாழ்நிலைகளோடும் தொடர்புடையன. எல்லாவற்றின் தொடர்புகளால் உருவாகும் கலைகள் மற்றும் இலக்கியங்கள் சமூகத்தின் ஆன்மாவாகவும் இயக்கமாகவும் இருக்கின்றன் இருக்கவேண்டும்.

> "தொடக்க நிலையில் விடுதலைப் புலிகளின் நேரடி ஆதரவு இலக்கியங்கள் நவீனத்தன்மையை மறுதலித்த வடிவங்களில் – குறிப்பாக விழிப்புணர்வூட்டும் பாடல் வடிவங்களையும் மேடைக்கவிதைகளிலும் – கவனம் கொண்டிருந்தன. 1990 களுக்குப் பிறகு ஈழ இலக்கியம் என்பதே போரியல் இலக்கியம் என்பதாகவே ஆகிவிட்டது"

**ஈழத்து வாசகர்களிடையே அல்லது படைப்பாளிகளிடையே ஜெயமோகன் சாருநிவேதா. மனுஷ்ய புத்திரன் ஆகியோரது எழுத்துக்களைப் படிப்பது அல்லது அவர்களையிட்டுப் பேசுவது ஓர் அந்தஸ்த்துக் குறியீடாக (status of sympolic) இருக்கின்றது. உண்மையில் இவர்கள் எழுத்துக்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் அதிர்வலைகளை ஏற்படுத்தினவா?**

நிகழ்காலத்தில் அதிகம் எழுதுபவர்களாக இவர்கள் அறியப்படுகிறார்கள். அதிகம் எழுதுபவர்கள் என்று வரிசைப்படுத்தினால் முதலில் இருப்பவர் ஜெயமோகன். இவரது எழுத்துகள் இணையவெளியில் அதிகம் கிடைக்கின்றன. சாருநிவேதிதாவும் இணையத்தில் கிடைக்கக்கூ டிய எழுத்தாளர் தான். ஆனால் மனுஷ்யபுத்திரன் அதிகமும் அச்சு ஊடகங்களில் எழுதுபவர். என்றாலும் அவரது இணையப் பக்கத்திலும் முக்கியமான பதிவுகள், தகவல்கள் கிடைக்கின்றன. புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து வாசகர்களுக்கு இணையவெளி எழுத்துகள் உடனடியாக அடையக்கூடியன. அதன் காரணமாகவே இவர்களின் பெயரும் எழுத்துகளும் தமிழ் பேசும் -வாசிக்கும் மனிதர்களிடம் விரைவாகப் போய்ச் சேர்ந்துள்ளன. இவர்களை விடவும் இன்னும் அதிகம் எழுதிய எழுதுகிறஎழுத்தாளர்களும்தமிழில்உண்டு. ஆனால்அவர்களின் எழுத்துகள் இணையவெளியில் படிக்கக் கிடைப்பதில்லை. இம்மூவரும் அதிகம் எழுதுபவர்கள் என்று சொல்வதைவிடவும் எதை எழுதவேண்டும்ஃ எப்படி எழுதவேண்டும் என்பதைத் தாங்கள் கண்டடைந்த சில கலை மற்றும் சிந்தனைத் தளத்திலிருந்து எழுதுகிறார்கள். அவை சரியானவையா? சிக்கலானவையா? நிகழ்கால வாழ்வின் மீது தாக்கம் ஏதோ ஒன்று கிடைப்பதாக நம்புகிறார்கள். அதனால் வாசிக்கிறார்கள். இந்தியத் தமிழ் வாழ்வு சார்ந்தே அதிகம் யோசிக்கும் விவாதிக்கும் இவர்களின் எழுத்துகள் ஈழத்தமிழ் வாசகர்களால் ரசிக்கப்படுவதன் காரணங்கள் என்னவாக இருக்கும் என்பதை இன்னும் ஆழமாக யோசிக்கவேண்டும். ஈழத்தமிழர்களுக்குள் ஓடும் இந்துமத நம்பிக்கை மற்றும் தத்துவப் பிடிப்புகளால் கூட ஜெயமோகன் விரும்பப்படலாம். அதேபோல் புலம்பெயர்ந்த ஐரோப்பிய வாழ்வின் சுதந்திரம் தரும் – குறிப்பாகப் பாலியல் சுதந்திரம் பற்றிய சொல்லாடல்களை முன்வைப்பவர் என்பதால் சாருநிவேதிதா கவர்பவராக இருக்கலாம். மனுஷ்யபுத்திரனின் மொழியும் கவிதையாக ஒன்றை வடிவமைக்கும் முறையும் யாரையும் ஈர்க்கக் கூடிய ஒன்று. ஒருவேளை ஈழத்தமிழர்களின் வலியும் வேதனையுமான வாழ்நிலையிலிருந்து தப்பிக்கும் மனநிலையை அவை உருவாக்குகின்றன என்பதுகூடக் காரணமாக இருக்கலாம். போரையும் சொந்த வெளியற்ற அகதிவாழ்வையும் மறப்பதற்கான மறதிக்குளிகைகளாக அவை தோன்றலாம்.

**ஈழத்தின் போரியல் இலக்கியம் பற்றிய உங்கள் பார்வைதான் என்ன ?**

போரின் ஏற்பும் இருப்பும் ஏற்படுத்திய காரணங்களும் வலிகளும் விரிவாகப் பதிவாகியுள்ளன. ஈழம் சாத்தியமில்லாமல் போயிருக்கலாம். அந்தக் கனவும் முயற்சிகளும் தமிழ் மொழிக்குத் தந்த இலக்கியங்கள், பழைய புறநானூற்றுப் பதிவுகளை விடவும் காத்திரமான பதிவுகளாக இருக்கின்றன. 1980-களின் பிற்பாதியிலேயே போரியல் இலக்கியப் பதிவுகள் தொடங்கிவிட்டன. தொடக்க நிலையில் விடுதலைப் புலிகளின் நேரடி ஆதரவு இலக்கியங்கள் நவீனத்தன்மையை மறுதலித்த வடிவங்களில் - குறிப்பாக விழிப்புணர்வூட்டும் பாடல் வடிவங்களையும் மேடைக்கவிதைகளிலும் - கவனம் கொண்டிருந்தன. 1990 களுக்குப் பிறகு ஈழ இலக்கியம் என்பதே போரியல் இலக்கியம் என்பதாகவே ஆகிவிட்டது. இந்த இடத்தில் குறிப்பாக மூன்று கவிதைத் தொகுப்புகளைச் சொல்ல விரும்புகிறேன். பதினொரு ஈழத்துக்கவிஞர்கள், " மரணத்துள் வாழ்வோம், வேறாகி நின்ற வெளி " என்ற வரிசையில் வந்த தொகுப்புக் கவிதைகள் தமிழ்நாட்டு வாசகர்களுக்கு மெல்லமெல்ல போரியல் வாழ்க்கையை அறிமுகப்படுத்தியவை என்பது எனது கணிப்பு. அதே நேரத்தில் இன்னொரு தொகுப்பான "சொல்லாத சேதிகளும் " இங்கு குறிப்பிட வேண்டிய தொகுப்பு. தமிழ்ப் பெண்களின் புதிய அடையாளத்தை முன் வைத்த கவிதைகள் கொண்ட தொகுப்பு. தொடர்ந்து சேரன், ஜெயபாலன், வில்வரத்தினம் என முக்கியமான கவிகளின் தொகுப்புகளோடு, கட்டுரை, கதை,

புகைப்படம் எனப் பலவற்றையும் உள்ளடக்கிய தொகுப்புகளாக லண்டனிலிருந்தும் பாரிஸிலிருந்தும் கனடாவிலிருந்தும் வந்த தொகுப்புகளின் வழியாகப் புலம்பெயர் வாழ்க்கையை வாசித்திருக்கிறேன். பத்மநாப ஐயர், சுகன், சோபா சக்தி, தர்மினி ஆகியோரின் ஒருங்கிணைப்பு முயற்சிகளும் இலக்கியச் சந்திப்புகளும் உண்டாக்கிய பணிகள். இப்போது 2009-க்குப் பிறகான வெளியீடுகள் புனைகதைகளாக இருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்து வாசிக்கிறேன் இவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துகளை ஆங்கிலம், ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கும்போது தமிழின் இருப்பை இந்த உலகம் என்றும் மறக்காது மறுக்காது. போர்க்கால வாழ்வையும் போரின் நினைவுகள் உண்டாக்கிய பதிவுகளையும் குறித்து வெளியிலிருந்து வாசிப்பவனாக ஒரு நூல் எழுத வேண்டும் என்ற நினைப்பை இவை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன. விரைவில் முடிக்க வேண்டும்

**"கடந்த 10 ஆண்டுகளின் இலக்கியங்கள் என்பது முழுமையாகத் தனிமனிதச் சிக்கலையும் அடையாளத்தையும் இருப்பையும் பற்றிய எழுத்துகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. முந்திய தலைமுறை சமூகத்தின் இருப்பையும் இயக்கத்தையும் உணர்ந்த, அரசியல் தளத்தில் பொருத்திக் காட்டிய எழுத்துக்களைத் தந்தவர்களாக இருந்தார்கள்"**

**ஈழத்திலும் சரி இந்தியாவிலும் சரி சுதந்திரத்துக்கான போராட்டங்கள் வடிவ வேறுபாட்டில் நடைபெற்றன. ஆனால் இந்தியாவில் போரியல் இலக்கியம் அதிகமாக உள்வாங்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று எண்ணுகின்றீர்கள் ?**

இந்திய சுதந்திரப் போராட்டம் போரியல் அம்சங்கள் கொண்டதல்ல. காந்தியின் வருகைக்கு முன்பேகூடத் திட்டமிட்ட போர்முறைகளைச் சுதந்திரப்போராட்டத்தின் வடிவமாக நினைக்கவில்லை. ஆங்காங்கே கலவரங்களும் தனிநபர் அழிப்பும் நடந்தன என்றாலும் கருத்தியல் ரீதியாகவும் நடைமுறைக்காரணமாகவும் போரை இந்தியர்கள் ஏற்றுக் கொண்டவர்கள் இல்லை. நேதாஜி போன்ற தலைவர்கள், வெளியிலிருந்து கிடைக்கும் உதவியை நம்பியே ராணுவ அமைப்பை உருவாக்கினார்கள். அதுவும்கூட இந்தியாவுக்குள் கட்டப்பட்ட ராணுவ அணிகள் கிடையாது. பிரிட்டானியர்களின் ஐரோப்பிய எதிரிகளோடு இணைந்து நடத்த நினைத்த போர்தான். விடுதலைக்குப் பிந்திய இந்தியாவிலும்கூட போரியல் என்பது ஒரு கருத்தியல் வடிவமாக ஒன்றிணைக்கப்படவில்லை. வெவ்வேறு மொழிசார் இனங்களாகப் பிளவுபட்ட ஒரு பெரும்பரப்பை ஒற்றைநாடாக ஆக்கியதும், அதனை ஒரே அரசால் ஆளமுடியும் என்ற நம்பிக்கையையும் பிரிட்டானியர்கள் உருவாக்கிவிட்டுப் போய்விட்டார்கள். போகும்போது சிக்கலான நிலப்பரப்புகளைத் தனித் தேசங்களாகப் பிரித்துவிட்டுப் போனார்கள். என்றாலும் இனப்பிரச்சினைகள் இந்தியாவில் இல்லாமல் இல்லை. அதனை முன்னெடுக்கும் சக்திகள் போர்வடிவங்களைக் கருவியாக நினைப்பதில்லை. அப்படி நினைப்பது நிகழ்காலத்தின் தேவையாக இருக்க முடியுமா? என்பதும் யோசிக்க வேண்டிய ஒன்று. ஏனென்றால் இருபதாம் நூற்றாண்டின் கடைசிக் காலகட்டங்கள் போரியலின் தன்மையையும் மையத்தையும் அர்த்தமிழக்கச் செய்துவிட்டன. இன்றைய போர்கள் ஆயுதங்களால் மட்டுமே நடப்பதில்லை என்பது உறுதியாகிவிட்டன. உலகநாடுகளின் சதிப்பின்னணிகளின் கண்ணிகளால் ஒவ்வொரு நாட்டின் விடுதலைப்போராட்டங்களும் திசைதிருப்பப்படுகின்றன. ஆயுத உற்பத்தி நாடுகளின் வியாபாரத்திற்காகவே தேசிய இனப்போர்களும், வட்டாரப் போர்களும் நடக்கின்றன. இந்தப் பின்னணியில் தான் இந்தியமொழிகளில் போரியல் இலக்கியப் பதிவுகள் இல்லையென்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

**தமிழகத்தின் நதிக்கரையோர எழுத்துக்களே (வைகை நதிக்கரை, தாமிரபரணி நதிக்கரை மற்றும் காவிரி ஆற்று நதிக்கரையோர எழுத்துக்கள்) அதிகம் தமிழ் இலக்கியப்பரப்பில் உலா வந்தன என்று அண்மையில் படித்திருக்கின்றேன். இது பற்றிய உங்கள் பார்வைதான் என்ன ?**

தாமிரபரணிக் கரையும் காவிரிக்கரையும் சிறுகதைகளாகவும் நாவல்களாகவும் எழுதிப் போட்டிபோட்டுப் பதிவுசெய்தன. வைகைக் கரையின் பதிவுகள் அந்த அளவுக்கு அதிகமாக உள்ளன என்று சொல்லமுடியாது. வேளாண்மை சார்ந்த வாழ்க்கைக்குள் ஏற்பட்ட நெருக்கடிகளும் மதிப்பீடுகளின் சரிவும் பதிவுசெய்யப்பட்டன. அதிகம் பதிவுசெய்யப்பட்ட வாழ்க்கை பிராமணர்களின் வாழ்வு தான். தொடர்ச்சியாக நதிக்கரை வாழ்வைத் தொடரமுடியாத நிலையையும் படிப்பு, வேலை காரணமாக நதிக்கரையோரங்களிலிருந்து அவர்களின் நகரங்களை நோக்கிய நகர்வுகள் எழுத்துக்களாகப் பதிவுசெய்யப்பட்டன. அப்பதிவுகளின் காலம் 1970-களோடு முடிந்துவிட்டது. ஆனால் எழுபதுகளுக்குப்பின் இந்தியாவில் நிகழ்ந்த நகர்மயமாதலும் கனரக தொழில் துறை மாற்றங்களும் வட்டாரத்தன்மையோடு பதிவாகத் தொடங்கின. அதனைத் தொடங்கி வைத்தவர்களாக நான் நினைப்பது ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், சுந்தரராமசாமி, சா. கந்தசாமி. பூமணி, சிவகாமி போன்றவர்கள். தமிழகத்தின் புஞ்சைக்காடுகளும் தீப்பெட்டிவாசனையும்

வடமாவட்டங்களின் வறுமைக்கிராமங்களும் அதிகமாக பதிவுசெய்யப்பட்டன. கடந்த கால் நூற்றாண்டுக்காலத்தில் சாதிய முரண்களும், நகரவாழ்வின் சிக்கல்களும், பெண்களின் இருப்பும் தொடர்ச்சியாகப் பதிவுகளாகத் தொடங்கியபோது நதிக்கரைகளெல்லாம் காணாமல் போய்விட்டன. ஆனால், கடந்த 10 ஆண்டுகளின் இலக்கியங்கள் என்பது முழுமையாகத் தனிமனிதச் சிக்கலையும் அடையாளத்தையும் இருப்பையும் பற்றிய எழுத்துகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. முந்திய தலைமுறை சமூகத்தின் இருப்பையும் இயக்கத்தையும் உணர்ந்த, அரசியல்தளத்தில்பொருத்திக்காட்டியஎழுத்துக்களைத் தந்தவர்களாக இருந்தார்கள். இப்போது எழுதுபவர்கள் இந்தத் தளத்திற்கு நுழைய நினைத்தால் உலகமயமாக்கலுக்குப் பிந்திய வாழ்க்கையைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தப் புரிதல் இப்போது குறைவாகவே இருக்கிறது என்றுதான் சொல்வேன்.

**ஓர் இலக்கியத்துக்கு கோட்பாடுகள் அல்லது சித்தாந்தங்கள் முக்கியமானவை என்று எண்ணுகின்றீர்களா இல்லை அது எடுத்துக்கொண்ட கதைக்களமும் கதைமாந்தர்களும் போதுமானவை என்று எண்ணுகின்றீர்களா ?**

இலக்கியத்திற்கு முதலில் தேவை இலக்கியத்தின் அடிப்படைகள் தான். அந்த அடிப்படைகளில் முக்கியமானது கதைக்களமும் கதைமாந்தர்களும் மட்டுமல்ல. காலப்பின்னணியும் தான். இந்த அடிப்படைகள் அந்தரத்தில் தனியாக அலைவன அல்ல. இம்மூன்றையும் தக்க சொல்முறையில் எழுதும் போது எழுதுபவரின் நோக்கமும் சார்பும் மனிதத்தன்னிலையின் அடையாளங்களும் வாழ்க்கை பற்றிய நிலைபாடும் இயைந்து உருவாவதுதான் எழுத்து. அந்த எழுத்து அதற்கான கோட்பாட்டை உள்ளடக்கியதாகவே இருக்கும். அந்தக் கோட்பாடு வெளியில் இருக்கும் அரசியல் கோட்பாடல்ல. படைப்புக்கான கோட்பாடு, படைப்புக்குள்ளேயே உருவாக்கப்படுவதுதான்.

**பொதுவாகவே பெரிய பிரபல படைப்பாளிகள் எல்லோரும் எழுத்து என்பது ஓர் தியானம் என்றும், அகமனம் ஓர் மையப்புள்ளியில் ஒன்றி இருந்தாலே எழுத்து வசப்படும் என்று சொல்கின்றார்கள். இதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள் ?**

தியானம், அகமனம் என்ற சொற்களைச் சமய நம்பிக்கையோடும் ஆன்மீகமான சொல்லாடல்களாகவும் நான் புரிந்துகொள்ளவில்லை. எழுதத்தேவையான தரவுகளைக் குறிப்புகளாக எழுதி வைத்துக்கொள்ளாமல் மனப்பதிவுகளாக வரிசைப்படுத்திக் கொள்வதும் முன்வைப்பதும் தான் எழுத்துக்கான தியானம் அகமனக்கோர்வை என்பதெல்லாம். அதே நேரத்தில் இன்று கையால் எழுதும் முறையைக் கைவிட்டுவிட்டுக் கணினித்திரையில் எழுதும் நிலைக்கு நகர்ந்துவிட்ட பின்பு இந்தத்தியானம், அகமனம் போன்ற சொற்கள் கூட அர்த்தமிழந்துவிட்டன. தட்டச்சுச் செய்வதும், பின் தள்ளி வைத்துக்கொள்வதும், இடையீட்டு முறையில் மாற்றுவதுமென எழுதும் முறைப் பலவாறாக மாறிவிட்டது. ஆனால் மனித மூளையென்பது நீங்கள் சொல்கின்ற நவீன முறைகளில் இயங்குவதில்லையே ? அதற்கு சிந்தனை என்ற ஒன்று தேவைப்படுகின்றது அல்லவா? சிந்தனை தேவைதான். சிந்தனை என்பதே மாற்றத்தை ஏற்பதுதான். நவீனமூளையாகமாறும்போதுநவீனமுறைகளோடு இயைந்துவிடும். மூளைமட்டும்மாறாதுஎன்றுசொல்லமுடியுமா?..

**ஐரோப்பாவில் இருக்கும் கட்டற்ற பாலியல் சுதந்திரத்தை ஆசிய சமூகம் குறிப்பாக தமிழக மக்கள் எப்படிப் பார்க்கின்றார்கள் ?**

எல்லாவகையான சுதந்திரமும் நமக்குக் கிடைக்காதவரை விரும்பத்தக்கதான தோற்றத்தை உண்டாக்கும். ஆனால் நாம் அதற்குள் இருக்கும்போது அதன் எதிர்மறைத் தன்மை தூக்கலாகிவிடும். ஒருவரையொருவர் சார்ந்து வாழும் வாழ்க்கையை முன்னிறுத்தும் ஆசியச் சமூகம்ஃ இந்தியச் சமூகம் உருவாக்கி வைத்துள்ள குடும்ப அமைப்பின் இறுக்கமும், தனியடையாளங்களை மறுதலிக்கும் போக்கும் தேவையற்றவை என்று தோற்றம் கொண்டன. சடங்கு, நம்பிக்கை, வழிபாடு எனச் சமய நடவடிக்கை சார்ந்து பெண்களைக் கட்டுப்படுத்தும் ஆசியச் சமூகங்களின் வாழ்க்கைக்கு எதிராகப் பெண்கள் குரல் கொடுக்க ஐரோப்பாவையே நாடவேண்டும். அதே நேரத்தில் ஐரோப்பாவில் பெருகும் மணவிலக்குகளும் தனித்து உலவும் முதியோர் பிரச்சினையும் ஆசியச் சமூகங்களின் பால் ஒரு ஈர்ப்பையும் உண்டாக்குவதை மறுப்பதற்கில்லை. கலப்புத்திருமணம், சாதிமறுப்புத்திருமணம் என அரசியல் சொல்லாடலோடு முன்வைக்கப்பட்ட புதுவகைத் திருமணமுறையை அவ்வளவாக நாடிச்செல்வதில் அதிகம் நாட்டம் காட்டாத தமிழர்கள்ஃ இந்தியர்கள் தன்னெழுச்சியான மாற்றக்காலகட்டத்தில் இருக்கிறார்கள் என்பது வெளிப்படை. குறிப்பாக உலகமயப்பொருளாதார உறவுகளால் பணவரவு பெற்றுள்ள குடும்பங்கள் அகமண முறையையும் குலக்குறி அடையாளத்தை வைத்துத் திருமணங்களைக் கட்டியெழுப்பும் உறவுகளையும் தளர்த்தத் தொடங்கிவிட்டன. சாதிக்குள்ளிருக்கும் பிரதேச அடையாளத்தைத் தாண்டிய- குலக்குறிகளை உதறிய- திருமணங்கள் தானாகவே நடக்கின்றன. இதன் மறுதலையாக மணவிலக்கு வழக்குகளின் எண்ணிக்கையும் அதிகமாகியிருக்கின்றன.

**'ஐரோப்பாவில் பெருகும் மணவிலக்குகளும் தனித்து உலவும் முதியோர் பிரச்சினையும் ஆசியச் சமூகங்களின் பால் ஒரு ஈர்ப்பையும் உண்டாக்குவதாக சொல்கின்றீர்கள்'. ஆனால், ஆசிய சமூகங்களிலும் இதே பிரச்சனைகள் சமகாலத்தில் மலிந்து காணப்படுகின்றனவே ?**

ஆசிய சமூகங்கள், ஐரோப்பியர்கள் கடந்து வந்துவிட்ட காலகட்டத்திற்குள் இப்போதுதான் நுழைகிறார்கள். ஆனால் ஐரோப்பியர்களுக்குக் கிடைத்ததுபோல அவ்வளவு நீண்ட காலம் அங்கேயே தங்கியிருக்கமுடியாது. எல்லாவகையான தகவல் தொடர்புகளும் ஏற்படுத்தும் உடனடித் தாக்கத்தினால் விரைவாக உருட்டிச் செல்லப்படும் வாய்ப்புகள் அதிகரித்துவிட்டன.

**மேற்குலக நாடுகளில் ஓரின சேர்கையாளர்களது திருமண உறவு மற்றும் சமூக அந்தஸ்த்துகள் சட்டவாக்கம் பெற்று இருக்கின்றன ஆனால் இந்தியாவில் இது பற்றிய பார்வை எப்படி இருக்கின்றது ?**

# “சிறுகதைகளில் புதுமைப்பித்தன். சிறுகதை நாவல் என்ற இரண்டிலும் தன்னை இருத்திவிட்டுப் போயிருப்பவர் ஜெயகாந்தன் என்றே சொல்ல விரும்புகிறேன்”

இப்போதுதான் பேச்சளவில் இருக்கின்றன. தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற நிலைகளை ஏற்றுக் கொண்டுவிட்ட இந்திய அரசியல் கட்சிகள் தங்களின் அடிப்படையான கருத்துநிலையோடு இவை முரண்பட்டவை என்றாலும் அவற்றைச் சட்டமாக்கவேண்டிய நெருக்கடியில் இருக்கின்றன. அரசதிகாரத்தில் இருக்கும் பா.ஜ.க.விற்கும் அதன் துணை அமைப்புகளுக்கும் இவையெல்லாம் உவப்பானவையல்ல என்பது வெளிப்படையானது. ஆனால் சர்வதேச சமூகத்தின் நெருக்கடியால் இவற்றைச் சட்டமாக்குவதிலிருந்து பின்வாங்க முடியாது என்பதும் உண்மை. வக்கிரமான பாலியல் புனைவுகளாலும் ஓரினச்சேர்க்கையினாலும் உருவாக்கப்பட்ட இந்துத்துவாவின் புராணக்கதைகள் இருக்கும்பொழுது எப்படி சமகால அரசு இதனை மறுதலிக்கும் ? இந்துத்துவம் அன்றாட வாழ்நிலையிலிருந்து கலை, இலக்கியங்கள், கதைகள் போன்றவற்றை விலக்கிவைத்துப் பார்க்கவேண்டும் என்று வலியுறுத்தக் கூடியன. உருவாக்கப்பட்ட பாலியல் புனைவுகளும், ஓரினச்சேர்க்கைச் சித்திரிப்புகளும் பின்பற்றுவதற்கானவையல்ல் விலக்கவேண்டிய எச்சரிக்கைக்கானவையென வியாக்யானங்களைத் தரும்.

**இப்பொழுது உள்ள தீவிர இந்துத்துவா சிந்தனைகளை கொண்ட அரசையும், பல்வேறு துறைகளில் முன்னேறி இருந்தாலும் இன்றுவரை சாதீயக்கொடுமைகளில் சிக்கியிருக்கும் இந்திய மக்களையும் ஓர் இலக்கியவாதி என்ற வகையில் எவ்வாறு நோக்குகின்றீர்கள் ?**

இருப்பதை மாற்றவேண்டுமென நினைப்பவர்கள் நடப்புவாழ்க்கையில் தங்களுக்கும், தன்னையொத்த சமூகக் குழுக்களுக்கும் பல உரிமைகளும் சலுகைகளும் கிடைக்கவில்லை என்று நினைப்பவர்களாக இருப்பார்கள். அவர்களே நடைமுறை வாழ்க்கையைப் புரிந்துகொண்டவர்கள். அந்த மாற்றம் சில குழுக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் தடுக்கவும் கூடும். அப்போது அவர்கள் அதை எதிர்ப்பார்கள். அம்பேத்கரால் வரையறை செய்து எழுதப்பெற்ற அரசியலமைப்புச் சட்டமும் அதன் நடைமுறைப்பயன்பாடும் இருந்த சாதியமைப்பைத் தளர்ச்சியடையச் செய்து இல்லாமலாக்கும் நோக்கம் கொண்டது. அதன் தொடக்க நிலையிலேயே அதனை எதிர்த்தவர்களின் குரல்களும் இருந்தன. பண்டித நேரு போன்றவர்களின் பிடிவாதத்தால் எதிர்ப்புக்குரல்கள் பின் வாங்கியிருந்தன. ஆனால் இப்போது பின் வாங்கிய சக்திகளின் வாரிசுகளிடம் அரசதிகாரம் சென்று சேர்ந்துள்ளது. விளைவுகள் கடுமையாகவே இருக்கும். சாதியவாதமும் முரண்களும் கொலைகளும் தலைதூக்குவதைத் தடுக்க முடியாது என்றே நினைக்கிறேன். ஆனால் இந்தச் சிக்கல்கள் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையானவை என்பதை உணர்ந்து மறுபரிசீலனை செய்யவும் வாய்ப்புகளுமுண்டு. சாதீயவாதம் ஒழியாமல், சாதியப்படிநிலைகளால் கிடைக்காமல் போன உரிமைகளையும் சலுகைகளையும் இனியும் கிடைக்காமல் தள்ளிப்போட முடியாது. வியர்வை சிந்தி உழைக்காத மனிதர்கள் இந்தியாவில் இருக்க முடியும். அதேநேரத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியினர் என்பதற்காக அவர்களுக்கு வியர்வை வழிவதிலிருந்து விலக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதும் நீண்டகாலத்திற்கு நிற்காது.

**தொடர்பாடலின் அதீத வளர்ச்சியால் பல சமூக வலைத்தளங்களும் கருத்துக்களங்களும் இன்று எம்மிடையே வந்திருக்கின்றன .இந்த ஊடகங்களின் அதீத வளர்ச்சியினால் தமிழ் இலக்கியப்பரப்பு பாதிப்படைந்து இருக்கின்றதா ?**

சமூக வலைத்தளங்கள், புதுவகை ஊடகங்கள் எல்லாம் காலத்தின் தேவையாக வெவ்வேறு காரணங்களுக்காக உருவாகின்றன. அவற்றால் இலக்கியப்பரப்பு பாதிப்படையும் என்று நினைக்கவில்லை. அவற்றின் வரவால் புதுவகை இலக்கிய வடிவங்கள் உருவாகும் வாய்ப்புகள் உண்டு என்பதால் அவற்றை வரவேற்கவும் பயன்படுத்திக்கொள்ளவும் தயாராக வேண்டும்.

**தமிழ் இலக்கிய பரப்பில் சிற்றிதழ்களின் பங்களிப்பு ஆரோக்கியமான நிலையில் இருப்பதாக கருதுகின்றீர்களா ?**

ஆரோக்கியமான நிலை என்பதற்கான வரையறைகள் எதுவும் இல்லை. தமிழில் ஆரம்பிக்கப்பட்ட சிற்றிதழ்கள் ஒவ்வொன்றிற்கும் ஆரம்ப நோக்கம் ஒன்று இருக்கும். அதனை நிறைவேற்றத்தக்க குழுவொன்று உருவாகும். அக்குழு தனது நோக்கத்திலிருந்து பெருமளவு விலகாமல் நடத்துவார்கள். விலக நேரிடும்போது நிறுத்திவிடுவார்கள். இன்னொரு நோக்கம் தோன்றும்போது திரும்பவும் ஆரம்பிப்பார்கள். அதற்குப் புதிய குழுக்கள் உருவாகும். இதுதான் இதுவரையிலான சிற்றிதழ்களின் வரலாறு. ஆனால் கட்சி, இயக்கம் சார்பில் ஆரம்பிக்கப்படும் சிற்றிதழ்களுக்கு இது பொருந்தாது. ஆனால் 2000-க்குப் பின்னர் தோன்றிய இடைநிலை இதழ்கள் முழுமையான கட்டமைப்போடும் விளம்பரத்தொகைகளைக் கொண்டும் பதிப்பக நலனுக்காகவும் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்துவது குற்றச்செயலல்

காலம் அப்படியான நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறது.

**ஆனால் இந்த இடைநிலை இதழ்கள் அல்லது வணிக சிற்றிதழ்கள்தானே அதிகளவிலான வீச்சுக்களைப்பெறுகின்றன ?**

வாசிப்பவர்களை அடைவதும் வாசிப்பதும் விவாதிப்பதும் தான் அதிக வீச்சுகளை எட்டுபவை. இத்தொடர் நிகழ்வுகளுக்கு உதவும் வகையில் வணிகக் கட்டமைப்பும் தேவை. அதனை முற்றிலும் எதிர்மனநிலையில் பார்த்தால் வீச்சையும் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. அதனால் கால் நூற்றாண்டுக்கு முந்திய சிற்றிதழ் மனோபாவத்தோடு எல்லாவற்றையும் வரையறுக்கும் நிலைபாடு எனக்கு உடன்பாடில்லை.

**நவீன தமிழ் இலக்கியத்தில் இன்றுவரைக்கும் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்திய படைப்பாளி என்று யாரை உங்களால் இனம்காட்ட முடிகின்றது ?**

ஒருவரை மட்டுமே சொல்ல வேண்டுமென்றால் சி.சுப்பிரமண்ய பாரதிதான். கவிதையில் சி.சுப்பிரமணிய பாரதி என்றால் சிறுகதைகளில் புதுமைப்பித்தன். சிறுகதை நாவல் என்ற இரண்டிலும் தன்னை இருத்திவிட்டுப் போயிருப்பவர் ஜெயகாந்தன் என்றே சொல்ல விரும்புகிறேன்.

**தமிழ்த்தேசியம் மற்றும் ஈழத்தமிழரது தாயக விடுதலைப்போராட்டம் தொர்பாக உங்கள் புரிதல்கள் எப்படி இருக்கின்றன ?**

1983 முதல் ஈழ விடுதலைப் போராட்டத்தைக் கவனித்து வருகிறேன். அப்போது நான் மாணவன். தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டுக் கிளர்ந்தெழுந்த தமிழகம் தழுவிய போராட்டங்களில் கலந்துகொண்டவன். பெரிய அரசியலறிவு அற்ற காலத்திற்குப் பிறகு பெரும்பான்மைச் சிங்கள ஆதிக்கத்திடமிருந்து விடுதலைபெற விரும்பும் தமிழ்ச் சிறுபான்மையின் தனி நாடு கோரிக்கை நியாயமற்றதல்ல என்று புரிந்துகொண்டும் ஆதரவு மனநிலையைக் கொண்டிருந்தேன். ஈழத்தமிழர்களை அப்படியொரு நெருக்கடிக்குள் தள்ளிய வரலாறுகளை நானறிவேன். ஈழப் போராட்டம் பண்பாட்டு அடையாளங்களின் காரணமாக உருவான போராட்டம். அதன் பின்னணியில் பொருளாதார நலன்கள் இல்லையென்று சொல்ல முடியாது. பொருளாதார நலன்கள் தான் முதன்மையென்றால் சிங்கள உழைக்கும் மக்களையும் ஒன்றிணைத்து வர்க்கப்போராட்டமாக நடத்தியிருக்கவேண்டும். இது மொழியை அடையாளமாக முதன்மைப்படுத்தி நடந்த போராட்டம். அப்போராட்டமுறையாக, ஆயுதப் போராட்டத்தைத் தேர்வுசெய்வதற்கான நெருக்கடிகளை அரசுதான் உருவாக்கியது. பின்னர், மொழியை மட்டும் அடிப்படையாகக் கொண்ட விடுதலைப் போராட்டமாக இல்லாமல் மதம் மற்றும் பிரதேச அடிப்படைகளைக் கொண்ட போராட்டமாக மாறியதை - மாற்றியதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பல்வேறு குழுக்கள் உருவானதற்கும், யார் விடுதலையை அடையும் முக்கியக்குழு என்ற முனைப்பில் நடந்த அழித்தொழிப்புகளுக்கும் காரணங்களை வெளியிலிருந்து சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. இவைதான் ஈழவிடுதலைப் போராட்டத்தைப் பற்றிய பார்வையைப் பலருக்கும் மாற்றியது. எனக்குள்ளும் மாறுபட்ட கருத்துகள் உருவானது. தமிழ்நாட்டின் இத்தகைய போராட்டத்தை முன்னெடுக்காத - பேசவே தயாரில்லாத பலர் தனி ஈழக்கோரிக்கையை ஆதரித்துப் பேசியபோது சந்தேகங்கள் பல உருவாகின. ஒரு நாட்டிற்கான விடுதலையை இன்னொரு நாட்டின் உதவியுடன் அடைய முடியும் என்ற நம்பிக்கை சிக்கலானது. தேசிய இனங்களின் உரிமை, தனித்துவம், மொழிசார் பண்பாடு என்பதை ஏற்காத இந்தியஃ மத்திய அரசுகளின் துணையுடன் தனிநாடும் விடுதலையும் பெற முடியும் என்று நம்பியதை நான் விமரிசனப் பார்வையோடுதான் கவனித்து வந்துள்ளேன். இந்தியப்பிரதமராயிருந்த ராஜீவ் காந்தியின் நடவடிக்கைகள் மீது எனக்குக் கடும் விமரிசனங்கள் இருந்தன. அத்தோடு தமிழ் மொழி பேசிய இஸ்லாமியர்களும், மலையகத்தமிழர்களும் இந்த விடுதலைப் போராட்டத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தார்கள் என்பதும் பல கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தன. அவர்களிடம் நம்பிக்கையை ஊட்டவேண்டும் என்ற முயற்சிகள் இருந்ததாகத் தெரியவில்லை. நான் படித்துத் தெரிந்துகொண்டதோடு அங்கிருந்து வருபவர்களோடு நடத்திய உரையாடல்கள் எல்லாம் திருப்தி அளித்தவை அல்ல. எப்போதும் சந்தேகத்தை எழுப்புவனவாக இருந்தன. 2000-க்குப் பிறகான ஈழப்போராட்டங்கள் மீது எதிர்மறைக் கருத்துகளே உருவாகிவளர்ந்தன. ஒருதேசத்தை இவ்வளவுகாலம்போருக்குள் தள்ளிய இயக்கத்தின் மீது எரிச்சல் கூடத்தோன்றியதுண்டு. என்றாலும் நாம் இன்னொரு நாட்டின் மனிதன். அதில் நுழைந்து கருத்து சொல்லும்-எதிர்ப்பைக் காட்டும்- தேவை நமக்கில்லை என்ற விலகல் மனப்பான்மை தான் என்னுடையதாக இருந்தது.

**எமது விடுதலைப்போராட்டமானது இனவழிப்பும் அதன்தொடராக வந்த பேரினவாத சித்தாந்தங்களின் அழுத்தங்களினால் உருவாகியதாக வரலாறு பதியப்பட்டிருக்க, மதம் மற்றும் பிரதேச அடிப்படைகளைக் கொண்ட போராட்டமாக மாறியது என்று எதன் அடிப்படையில் கூறுகின்றீர்கள் ?**

தமிழ் மொழி பேசும் இஸ்லாமியர்களும், மலையகத்தமிழர்களும் இந்த விடுதலைப் போராட்டத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தார்கள் இப்போதும் பார்க்கிறார்கள் என்பதை மறுத்துவிடவும் மறந்துவிடவும் முடியுமா? போராட்டக் களத்தில் இணைந்து நின்றவர்களிடம் கூட வடக்கு - கிழக்கு மாவட்ட உணர்வுகள் தலை தூக்கியதை இல்லையென்று சொல்ல முடியுமா?

**உங்களுடைய எழுத்துத்துறையில் ஆதர்சங்கள் என்று யாராவது இருந்திருக்கின்றார்களா ?**

ஜெயகாந்தனின் புனைவெழுத்துகளும் புனைவுகளும் எப்போதும் ஈர்ப்பவை. அவருடைய புனைவுகளைப் போலப் பலவற்றை எழுதவேண்டுமென்ற ஆசை எனக்குண்டு.

**புலம்பெயர் இலக்கியம் பற்றிய உங்கள் பார்வை எப்படி இருக்கின்றது ?**

தமிழின் இருப்பைச் சர்வதேசப் பரப்பிற்குள் அதன் அடையாளத்தோடு கொண்டு சேர்த்துள்ளன. போரின்

# "அண்மையில் இந்தியாவில் இருந்த பெரும் படைப்பாளிகள் தங்களுக்கு கிடைத்த அதிஉயர் விருதுகளை எல்லாம் திருப்பி ஒப்படைத்து இருக்கின்றார்கள். இதைப்பற்றிய உங்கள் பார்வை எப்படி இருக்கின்றது?"

வழி தமிழர்களின் இழப்பின் அளவு சொல்லத்தக்கதல்ல. அதன் மறுதலையாக இலக்கியமாக - போரிலக்கியமாகவும் புலம்பெயர் இலக்கியமாகவும் தமிழ் பெற்றுக்கொண்டதும் பெரிய அளவினது. அவை சர்வதேசத்துக்கான மொழியில் பெயர்க்கப்படும்போது இலக்கியமாக அவை ஆற்றும் பங்களிப்பு பல பரிமாணங்களைக் கொண்டதாக அமையும். உலகத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பி, ஆயுதப்போராட்டங்கள் சாதிக்காத - பெற்றுத்தராத விடுதலையைக் கூடச் சாத்தியமாக்கக் கூடும்.

**தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழ் இலக்கியம் ஏற்படுத்திய அதிர்வுகள் உங்கள் பார்வையில் எப்படி இருக்கின்றது ?**

முதுகலை படிக்கும்போது இலங்கையை ஒரு திறனாய்வின் பிரதேசமாக நினைத்துக்கொண்டிருந்தேன். பேராசிரியர்களான க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, எம்.எ.நுஃமான், சிவசேகரம், தளையசிங்கம், டொமினிக் ஜீவா எனப்பலரும் உருவாக்கிய சித்திரம் அது. செங்கைஆழியான், டேனியல் போன்றவர்களின் புனைகதைகள வாசித்திருக்கிறேன். அவை தமிழ்நாட்டின் இன்னொரு பிரதேசப் புனைவுகளாகவே எனக்குள் பதிந்தன. பின்னர் போர்க்கால இலக்கியங்கள் ஏற்படுத்திய தாக்கம் முற்றிலும் வேறானவை. அதைப்பற்றி முன்பே சொல்லிவிட்டேன். தமிழ் இலக்கியப்போக்கையும் வரலாற்றையும் எழுதும் பொறுப்பு என்னிடம்வழங்கப்பெற்றால், கடந்த கால் நூற்றாண்டுவரலாற்றில் செம்பாதி இடத்தை ஈழத்தமிழ் இலக்கியத்திற்கே வழங்குவேன்.

**அண்மைக்காலத்து ஈழத்து இலக்கியங்கள் அரசியல் வெடில்கள் அதிகம் நிறைந்து இருப்பதால் அவை பன்முகப்படுத்தப்பட்ட இலக்கியத்தரத்தை காணுவதற்கு தவறிவிட்டன என்ற காட்டமான விமர்சனம் உண்டு. இதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள் ?**

ஒரு மொழியின் இலக்கியப்பரப்பில் பன்முகத்தையின் தேவை பற்றிக் கேட்டால் அதன் தேவையை வலியுறுத்தவே செய்வேன். ஆனால் பெருந்தொகையான மக்களைப் பலிகொடுத்துவிட்டுப் பெரும் யுத்தத்தில் நிர்க்கதியாக நிற்பவர்களைப் பார்த்து இப்படிச் சொல்வது உள்ளுக்குள்ளிருந்து வரும் விமரிசனமாகவே இருக்க முடியும். என்னைப் போல வெளியிலிருந்து விடுதலைப்போராட்டத்தைப் பார்த்தவர்கள் இப்படியெல்லாம் கருத்துச்சொல்ல அருகதையற்றவர்கள்.

**ஈழத்தமிழராகிய எங்கள் போராட்ட வலிகளிலும் வாழ்வியலிலும் எதுவித சம்பந்தமுமே இல்லாத தென் இந்திய சினிமா இயக்குனர்களால். எமது வாழ்வும் வலிகளும் திரைப்படமாக்கப்படும் பொழுது அதன் சுயம் அல்லது உண்மைத்தன்மை காயடிப்பது பற்றி எங்களுடையே காட்டமான விமர்சனம் ஒன்று உண்டு. இந்த விமர்சனத்தை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள் ?**

நியாயமானது என்றே ஏற்பேன். பக்கத்துவீட்டுக்காரனின் பார்வையோடு எடுக்கப்படுகிறது. பக்கத்துவீட்டுக்காரர்களின் இரக்கப்பார்வைகூட இல்லை அதில். ஒன்று கிளர்ச்சியடைந்து கைதட்டும் மனோபாவமாக இருக்கிறது. இல்லையென்றால் ஆலோசனை சொல்லும் மேதைமைத்தனமாக இருக்கிறது.

**மில்லேனியத்தின் பின்னரான உலமயமாக்கலின் அசுர வேகம்மனிதவாழ்வியலைஅடியோடுமாற்றியிருக்கின்றது. இதை நீங்கள் எப்படிப்பார்க்கின்றீர்கள் ?**

அடியோடு மாறச்சொல்கிறது என்பதென்னவோ உண்மைதான். ஆனால் ஆசிய சமூகங்களின் கீழ்த்திசை வாழ்வும், மன அமைப்பும் அவ்வளவு சுலபமாக மாறிவிடக்கூடியன அல்ல. நின்று நிதானமாகத் திரும்பித்திரும்பிப் பார்த்துவிட்டு நகரும் பூனைக்குட்டியைப் போன்றது இந்திய வாழ்க்கைமுறை. இந்துமதத்தின் சமூக அடித்தளத்தின் மேல் தனது தன்னிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்தியர்களும் இலங்கையர்களும் அவ்வளவு சுலபமாக உலகமயத்தோடு ஒட்ட ஒழுகிவிடுபவர்களல்ல.

**அண்மையில் இந்தியாவில் இருந்த பெரும் படைப்பாளிகள் தங்களுக்கு கிடைத்த அதி உயர் விருதுகளை எல்லாம் திருப்பி ஒப்படைத்து இருக்கின்றார்கள். இதைப்பற்றிய உங்கள் பார்வை எப்படி இருக்கின்றது?**

விருது திருப்பியளித்தல் என்பது எதிர்ப்புணர்வின் அடையாளம். சாகித்திய ஞானபீட பத்ம விருதுகளைத் திரும்பக் கொடுத்தல் இப்போதிருக்கும் அரசை ஆட்சியதிகாரத்திலிருந்து நீக்கும் நோக்கம் கொண்டதல்ல. கலைஞர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்கள் எப்போதும் பண்பாட்டரசியலில் கவனம் செலுத்துபவர்கள். இப்போதுள்ள அரசின் பண்பாட்டு நடவடிக்கைகளும்

கொள்கைகளும் தங்களுக்கு உவப்பானவையல்ல என நினைக்கிறார்கள். இந்துமதத்தின் தோற்றம் இந்த நிலப்பரப்பில் உருவானது என்றாலும் அதன் பகுதியாகவே மாற்றுக்கருத்துகளையும் சிந்தனைப்போக்குகளையும் உள்வாங்கிய - உடன் வாழ அனுமதித்த வரலாறு இந்தியாவிற்கு உண்டு என்ற நம்பிக்கை தவறானது என்று சொல்ல முடியாது. மதச்சார்பின்மை அல்லது சகிப்புத்தன்மை என்பது ஆங்கிலேயர்களின் காலனியாதிக்கம் உருவாக்கித் தந்த கருத்தல்ல. வைதீக இந்துமத உருவாக்கத்தின் சமகாலத்திலேயே சமணம், பௌத்தம் போன்றன வைதீகத்தைக் கேள்விக்குள்ளாக்கிய கருத்தோட்டங்கள் கொண்டவை. தென்னிந்தியாவில் வைதீகத்தை ஏற்றுக்கொள்ளாத மனிதர்களின் வாழ்நிலையைக் காட்டும் திணைவழி வாழ்க்கை முறை இருந்துள்ளது என்பதைத் தமிழின் திணைக்கவிதைகள் சொல்கின்றன. அதிலிருந்து உருவான வாழ்க்கை முறையே திராவிட மொழிகளின் செல்வாக்குப்பெற்ற தென்னிந்தியாவின் சமயவாழ்வு. வைதீக இந்து சமயத்தின் பிரிவுகளாகச் சொல்லப்படும் அறுசமயங்களும் வெவ்வேறு கருத்தியலையும் சடங்குகளையும் கொண்டாட்டங்களையும் கொண்டவை. சார்வாகம், நியாயவைசேடிகம், ஆசிவகம் போன்ற வைதீக சமயத்தை நிராகரிக்க முயன்றவை. சைவத்தின் பிரிவாகத்தோன்ற வீரசைவம் தனித்த வாழ்முறையைக் கன்னட தேசத்தில் உண்டாக்கிய வரலாறு உண்டு. வைணவத்தைச் சூழலோடு பொருத்தி வேறுபாடுகளைக் களைய முற்பட்ட இராமானுசர் போன்றவர்கள் இங்கு தோன்றியவர்கள். எனவே இசுலாமியமும் கிறித்துவமும் இங்கு வருவதற்கு முன்பே பன்மைத்துவப் பண்பாடு இந்தியாவின் அடையாளம். அதனைத் தொலைப்பது சமூகத்தில் அமைதியைக் குலைக்கும் எனக் கலைஞர்களும் எழுத்தாளர்களும் நினைக்கிறார்கள். அந்த நினைப்பைச் சொல்ல தங்களிடம் இருக்கும் வழியாகஃ கருவியாகவே விருதுகளைத் திருப்பித்தரும் நிகழ்வைக் கையிலெடுத்தார்கள். விருதுகளை மறுதளித்தல் அல்லது திருப்பித் தருதல் உலகம் முழுவதும் எதிர்ப்பின் அடையாளமாக இருந்துள்ளது. இதனோடு உடன்படுகிறவன் நான். ஆனால் இதில் உடன்பாடில்லாதவர்களைக் கட்டாயப்படுத்தித் திருப்பித் தரும்படி வலியுறுத்துவதையும் நான் கண்டிப்பேன்.

**இறுதியாக, 'இன்றைய பல எழுத்தாளர்களும் சரி திறனாய்வாளர்களும் சரி தங்கள் சொற்களை பொதுவெளியில் கூறியதற்கு விசுவாசமாக இல்லது பின்னர் அவற்றை தங்கள் சொந்தவாழ்வில் அநாதரவாக கைவிட்டுள்ளார்கள்'. என்ற ஓர் கடுமையான விமர்சனம் எழுந்துள்ளது இதை எப்படி நீங்கள் பார்க்கின்றீர்கள் ?**

பொதுவெளி அடையாளமும் தனிமனித அந்தரங்கமும் எப்போதும் எதிரெதிர்ப் பயணங்களை மேற்கொள்ளக்கூடியன. இரண்டையும் ஒன்றாக வைத்திருப்பவர்கள் மகான்கள். எழுத்தாளர்கள் மகான்களா ? தெரியவில்லை. மகான்களாக அறியப்பட்டவர்களின் அந்தரங்க வாழ்வுகளே, அவர்களின் மறைவுக்குப் பின்னர் விமரிசனங்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றன. எழுத்தாளர்களும் மனிதர்கள் தானே? மனிதன் மகத்தான சல்லிப்பயல் என்று ஜி.நாகராஜன் சொன்னதைத் திரும்பச் சொல்ல வேண்டும்.




**கலையின் திறமையாளர்களை , இனம்கண்டு புதுமுக முயற்சியாளர்களுக்கும், புகழ்பெற்ற முதிர்ச்சியாளர்களுக்கும் வெளிச்சம் கொடுக்கும் முகவரி "முகடு" , இதழ் பல சிரமங்கள் மத்தியிலும் 12ஆவது முகடு , இதழினை சிறப்பாக வெளியீடும் இக் குழுவினருக்கும் ஆசிரியர்களுக்கும் தொகுப்பாளர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்**

மன்மதன் பாஸ்கி

அறியப்பட்ட எழுத்தாளர்களின் படைப்புக்களை இதழ்களில் பிரசுரிக்க போட்டிபோடும் சூழலில் இளம் படைப்பாளர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் முகமாக முகடு இதழுருப்பெற்றது. அதன் இரண்டாண்டு பூர்த்தியையிட்டு தங்கள் படைப்புக்களால் இதழை செழுமையுறச்செய்த படைப்பாளர்களுக்கு முகடு ஆசிரியர் குழுமம் நன்றி கூறுவதோடு அவர்களிடம் தொடர்ந்தும் பங்களிப்பை வேண்டுகிறது. அத்தோடு நில்லாமல் அவர்களை இச் சிறப்பிதழ் மூலம் அறிமுகம் செய்வதில் பெருமிதம் கொள்கின்றது.




அஞ்சரன் பிரான்ஸ்



தி.வஜைன் பிரான்ஸ்



V.பார்த்திபன் பிரான்ஸ்



அகரமுதல்வன்



லக்ஷ்மன் வித் பிரான்ஸ்



சு கார்வண்ணா பிரான்ஸ்



ரூபன் சிவராஜா



குமரன் கதிர்காமர் பிரான்ஸ்



கோமகன் பிரான்ஸ்



மாலினி



ரதிமோகன் டென்மார்க்



திலாந்தன்



அ.மயூரன் லண்டன்



வி.சபேசன்



யாழ் தர்மினி பத்மநாதன்
இலங்கை



பாமினி துசியந்தன்



பாலன் தோழர்



இரா.சக்தி பிரான்ஸ்



சு.பா.ரஞ்சன் டென்மார்க்



யோ.புரட்சி இலங்கை



ரியாஸ்குரானா இலங்கை



கிரிஷாந்இலங்கை



து.தயாளன்



ஜெ.திலவன்



கவிமகான்.இ



வி.அல்விற் பிரான்ஸ்




சுகி சுவிஸ்



ஜெ.விநோத் இலங்கை



சால்ஸ் ஜெரட்ணம்பேரமன்



தி.திருக்குமரன் லண்டன்



தியாகராஜா திவாகரன்
லண்டன்



சிவரதன்



பிரபுதாஸ் பிரான்ஸ்

நெடுமாரன் அவுஸ்ரேலியா

நெற்கொழு தாசன் பிரான்ஸ்

ஷே.பரமசாமி

stalin dass

விக்னேஸ் ராஜ

வாசு முருகேஸ்

தீபிகா இலங்கை

மூனாத்தானா இலங்கை

தவரஞ்சினி நடராஜா(சுரேக்கா)தனச்செல்வி

இலங்கை

கொற்றவன்

ஆர்த்தி

வாசு

டிலானி

ரியாஸ் அஹமது

ஈழபாரதி

மதிவதனி

தமிழ்மாறன் ஆவுஸ்ரேலியா

டானியல் அன்ரனி

வாணமதி

பவாநந்தன் பிரான்ஸ்

வேலன் (லண்டன்)

# மிஞ்சியிருப்பவர்களையும் பலியிடும் சம்பந்தனின் சமஸ்டி

அகரமுதல்வன்



“பனையேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதை”யாக எம் மக்களின் அவலத்துக்கு நீதி கிடையாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர்கள் ஒத்த மனம் கொண்ட ஒத்த தமிழின எதிர்ப்புக் கொண்டவர்களாக வரலாறு எங்கும் இருந்ததைப் போல இன்றைய அரசும் இருந்து வருகிறது.

கடந்த காலத்தில் “சமாதானத்துக்கான வெள்ளைப் புறா“ என்று சந்திரிக்கா ஏற்படுத்திய பிம்பத்தைப் போல “நல்லிணக்க அரசு” என மைத்திரி ரணில் அரசும் பிம்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சிங்கள அரசு இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கு நீதியைத் தந்துவிடுமென நம்புகிற தமிழ் தேசியக் கூட்டமைப்பு நல்லிணக்க அரசென அழைக்கப்படும் மைத்திரி ரணில் அரசை சர்வதேச சமூகத்திடம் இருந்து காப்பாற்றி வருகிறது.

இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஒப்ப அவர்களுக்கான நீதிக்காய் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதுவரை காலத்திலும் இயங்கியது கிடையாது. அப்பாவி மக்களாய் கொல்லப்பட்டும் சித்ரவதைக்கு உள்ளாகியும் வாழ்வின் படு துன்பமான கணங்களோடு வாழ்ந்துவரும் மக்களிடம் கலந்தாலோசித்து எந்தவொரு அரசியல் முடிவுகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் எட்டப்படுவது கிடையாது. மக்களாகிய நாம் முள்ளிவாய்க்காலில் எதிரிகளின் கால்களில் கொடும் விதியால் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களாய் ஆக்கப்பட்டிருக்கிறோம். நாம் நீதிக்காய் வாய்

திறக்க முடியாத அளவுக்கு நசுக்கப்பட்டிருக்கிறோம். பிணங்களை கடல் முழுதும் நிரப்பி இரத்தத்தால் எமது இராணுவத் தோல்வியை அடைந்தோம். எமது இலட்சியம் தாயக விடுதலையே தவிர சிங்கள ஆட்சியாளர்கள் பிச்சை யிடும் சமஷ்டி தீர்வல்ல. சமஸ்டியை தனது அரசியல் வியூகத்தால் தமிழர்களுக்கு பெற்று தருவதைப் போல பாவனை செய்யும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சமஷ்டி மூலம் நீதிக்காய் போராடும் தமிழ் மக்களை பலியிடப்போகும் முறையற்ற சமஸ்டியை பரிந்துரை செய்ய எத்தனித்துள்ளார். நாம் எதிரிகளின் கால்களில் மட்டுமல்ல எம்மவர்களின் கால்களிலும் முள்ளிவாய்க்கால் நிலத்தில் காவு கொடுக்கப்பட்டிருக்கிறோம். தந்தை செல்வா முன் வைத்த சமஸ்டிக்கும் சம்பந்தன் முன்வைக்கும் சமஸ்டிக்கும் கால ரீதியாக அரசியல் ரீதியாக நிலைப்பாடுகள் சார்ந்து எத்தனையோ வித்தியாசங்கள் இருக்கின்றன.

ஒரு இனப்படுகொலைக்கு பின்னான இத்தனையாண்டுகளில் இவ்வளவு மோசமான அரசியலையும் அநாகரிகமான தீர்வையும் வேறு எந்த இனமும் அடைவதற்கு முனையாது. இத்தனையாண்டு கால விடுதலைப் போராட்டத்தில் இருந்த எமது இனத்தில் அரசியல் செறிவுடைய கல்வியலாளர்கள் இருந்த அளவை பார்க்கிலும் ஒப்பீட்டளவில் அரசியல் அறிஞர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதே. அரசியல் செயற்பாடுகளைத் தாண்டி அது சாத்தியங்கள் மற்றும் யதார்த்தங்களுடனான வியூகங்களை வகுக்கவல்ல திறன் மிக்க சிந்தனைகளிலும் தங்கியுள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு பின்பான இத்தனையாண்டு காலத்தில் பொதுவாக்கெடுப்பு குறித்து நமது அரசியலாளர்கள்,அறிஞர்கள்,கல்வியாலளர்கள் என நீளும் சமூக அடையாளங்களோடு வாழ்கிற எத்தனை பேர் குரல் கொடுத்திருக்கிறோம். நாம் உலகின் இனப்படுகொலை வரலாற்றில் கொண்டிருந்த சனத்தொகையில் அதிகமாகக் கொல்லப்பட்டிருக்கும் ஒரு இனமாக 21ம் நூற்றாண்டில் வாழத் தலைப்பட்டிருக்கிறோம். உலகம் முழுதும் பரந்து வாழ்கிற தமிழீழர்கள் எத்தனை பேர் இது குறித்து அரசியல் ரீதியாக பொருள்கொள்ளும் படி உரையாடியிருக்கிறோம்.? நாம் கூட்டாக கொன்றொழிக்கபட்ட ஒரு இனத்தின் எச்சமாக இருந்து வருகிறோம். நாம் அரசியலை புறக்கணிக்க முடியாதவர்கள்.

எம்மிலிருந்து அமைப்பு ரீதியான மனோபாவங்களைக் களைந்து ஒட்டுமொத்த இனத்தின் நீதிக்காய் போராடவேண்டும் என்கிற மனோநிலைக்கு நம் அரசியல் பண்பு மாறவேண்டியிருக்கிறது. “முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை” எனும் இந்தச் சொல்லாடல் எமது அரசியல் சொல்லாடல். நீதிக்கான முத்திரை. எங்கள் கைகளில் நீதியும் பிணங்களும் கண்ணீரும் நிரம்பிக் கிடக்கிறது. தாயகத்தில் அரசியல் அடையாளமாக இருக்கும் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு மரபு ரீதியான மிதவாத அமைப்பு. அது தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் செயற்பட்ட தன்மையில் இப்போது இயங்குவதில்லை. ஒரு பிரமிக்கத்தக்க விடுதலைப் போராட்டத்தின் பளுவைச் சுமந்த மக்களின் கருத்தை எள்ளளவும் மதிக்காத செவிமடுக்காத யுத்தத்தின் மயிரளவு பளுவைக் கூடச் சுமக்காத சம்பந்தனும் சுமந்திரனும் மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பதை மிஞ்சியிருக்கும் நாம் வேடிக்கை பார்ப்பதுவும் இனப்படுகொலைக்கு நிகரானது அன்றி வேறெதுவுமாயில்லை. அண்மையில் மன்னாரில் நிகழ்ந்த கூட்டத்தில் சம்பந்தன் தாம் முன் வைக்கப்போகும் சமஷ்டி ஒஸ்திரியாவில் உள்ள சமஷ்டி என்று குறிப்பிட்டுள்ளார். ஒஸ்திரியாவின் சமஷ்டியை சம்பந்தன் அறிந்திருக்கிறாரா? அல்லது சுமந்திரன் அறிந்திருகிறாரா ? சமஸ்டி என்கிற ஒரு ஏமாற்றும் வித்தையை சம்பந்தன் தமிழ் மக்களின் பிணங்கள் மீது காட்டுகிறார். சிங்கள ஆட்சியாளர்களின் தமிழ் முகமாக சம்பந்தன் உருப்பெற்று நீண்ட காலமாகி விட்டது. ஒஸ்திரியாவில் உள்ளது பெயரளவில் சமஸ்டி என்றாலும் கூட அதற்கு எந்தவித அதிகாரங்களும் கிடையாது. சிங்கள ராஜதந்திரத்தின் அனைத்து படுகுழிகளிலும் தமது அரசியல் நகர்வுகளின் மூலம் மிஞ்சியிருக்கும் தமிழர்களின் வாழ்வை புதைக்க எண்ணியிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அரசியல் ரீதியான தன்மைகளோடு தமிழீழர்கள் கேள்வி கேட்கவேண்டும். இந்த வாக்கியத்தின் மூலம் இந்தக் கட்டுரையை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானது எனும் முடிவுக்கு வருவது குறித்து எனக்கு கவலையில்லை. ஆனால் சம்பந்தன் முன் வைக்கப் போகும் சமஷ்டி யாருக்கானது. இனப்படுகொலையைச் சந்தித்த மக்களுக்கானதா? இனப்படுகொலையைச் செய்த சிங்கள இனத்தின் ஆசைக்கானதா? இறுதி அர்த்தத்தில் நாம் பூரண அரசியல் பண்புகள் கொண்ட சிந்தனைகளின் ஊடாக புலம்பெயர் நாடுகளில் அமைப்பு பகை முரண்களை களைந்து, ஒட்டுமொத்த இனத்தின் மீட்சிக்காக தாயகத்தில் அல்லலுறும் போரின் யுகப் பளுவை தூக்கிச் சுமக்கும் மக்களுக்காய் நீதிக்காய் பொதுவாக்கெடுப்பு ஒன்றே தீர்வென உழைப்பது அது தொடர்பாகமேற்கத்தையமனிதவுரிமைசெயற்பாட்டாளர்கள் மத்தியில் கலந்துரையாடல்களை மேற்கொள்வதை ஆரம்பிக்கவேண்டும். அல்லாது போனால் நாம் இன்னொரு தடவையும் அரசியல் ரீதியாக கொல்லப்படும் மனிதர்களாய் ஆகிவிடுவது உறுதியாகிவிடும்.

# கலாச்சாரத்தின் பெயரால் விலைபோகும் கலாச்சாரம்



மாலினி

கண்டம், நாடு, இனம் , மொழி, சமயம் என்ற ரீதியில் தான் அனேகமாக நாங்கள் எங்கள் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைக் கடைப்பிடித்துக் கொண்டும் அடையாளப்படுத்திக் கொண்டும் இருக்கிறோம். இருந்தும் கண்டம் , நாடு தாண்டி வாழ நேர்கையில் வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை நாமே தேடிக் கொள்ளும் போது அவைகளைத் தொடர்வதற்கான வாய்ப்பு வசதிகள் ஓரளவு குறைவாகவே இருந்தாலும் முற்று முழுதாக அவைகளை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு யாரும் யாரையும் வற்புறுத்துவதில்லை. எங்கள் வாய்ப்புக்கள் வசதிகளை நாடி நாமே அவைகளை விட்டு ஒதுங்கி விடுவது தான் த ற்போதய சூழலில் அதிகளவு நிதர்சனமாக இருக்கிறது போலிருக்கிறது.

# "ஆக மொத்தத்தில் கலாச்சாரம் கலாச்சாரம் என்று வாய்கிழியக் கத்திக் கொண்டிருக்கும் நாம் தான் வசதிகளுக்காகவும் வாய்ப்புக்களுக்காகவும் அவைகளை கேவலமாக விலை பேசிக் கொண்டிருக்கிறோம்"

போரின் போர்வையில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த ஆரம்ப காலங்களில் வதிவிட அனுமதி பெற்றுக் கொள்வதற்காக வெள்ளையினப் பெண்களை மணந்தவர்கள் உண்டு. பின்னாட்களில் ஒரு வித ஒப்பந்தம் போல வதிவிட அனுமதிக்காக வெள்ளையினப் பெண்ணை பெயருக்கு சட்டப்படி மணப்பதும் குறிக்கப்பட்ட காலத்தின் பின் விசா நிரந்தரமாகியதும் , சட்டப்படி விவாகரத்து எடுத்துக் கொண்டு ஆரம்பத்தில் பேசப்பட்ட தொகையை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதுமான நடைமுறைகளும் இருந்தன. காலப் போக்கில் அரசாங்கங்களுக்கு மூக்கில் வியர்த்து சட்டத்தை இறுக்கிய பின் இந்த நடை முறையும் காலாவதியாகியது. இருந்தும் தங்கள் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்து கொள்ள காலத்துக்குக் காலம் மக்கள் எதோ ஒரு விதத்தில் புதிய யுக்திகளைக் கண்டு பிடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இரண்டு சம்பவங்கள் தான் நான் தொடர்ந்து உங்களுடன் பேசப்போகும் விடயம். அதிக தூரத்துக்கு எனக்கு அந்நியமான இடங்களுக்கு சென்று இந்தப் பிரச்சனை பற்றி எடுத்துக்காட்ட நான் விரும்பவில்லை. நான் வாழும் சூழலில் எனக்கு மிகவும் அண்மிய பகுதியில் நடக்கும் சம்பவங்களும் நேரடி உரையாடல்களுமே இக்கட்டுரையின் மூலாதாரம் கோடைகால மாலை நேரங்களில் காலாற நடக்கும், அடுக்குமாடித் தொடர்களில் வசிப்பவர்கள் வெளியில் வந்து இயற்கைக் காற்றை உள்ளிழுத்து ஆழச் சுவாசிக்கும் அமைதியான பூங்கா அது. சுற்றிலும் அண்மைக்காலத்தில் மிக அதிகமாக தன்னை விஸ்தரித்துக் கொண்டு, இது வரை இருந்த டொச் மொழிக் கல்வி தவிர ஆங்கிலமொழி உயர்கல்விக் கூடங்களை அதிகமாக உருவாக்கிக் கொண்டு வெளிநாட்டு மாணவர்களுக்கு அதிக வாய்ப்புக்களை கொடுத்திருக்கும் பல்கலைக்கழகங்கள். அதைச் சூழ உள்ள வீடுகளில் வாடகை கொடுத்துத் தங்கியிருக்கும் வெளிநாட்டு மாணவ மாணவிகள்.

இந்த வெளிநாட்டு என்ற பதத்துக்குள் அதிகம் அடக்கமாகி இருப்பவர்கள் ஆபிரிக்க, ஆசிய இனத்தவர்கள். இதில் இலங்கையில் இருந்து கற்க வந்தவர்கள் 0.01 % வீதமாக இருக்கலாம் அதற்கு உயர்கல்விக்கு செல்வதெனில் ஆங்கில நாடுகளுக்குத் தான் செல்ல வேண்டும் என்ற எம்மவர்களின் மன நிலை தொன்று தொட்டு மாறாமல் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கக் கூடும். மற்றப்படி அனேகமாக எல்லா இனங்களுமே சம அளவில் கற்கும் இதில் கிட்டத்தட்ட எங்கள் அடிப்படைக் கலாச்சாரத்தோடு ஒத்துப் போகக் கூடிய , எங்களை விட கலாச்சாரம் பண்பாடு அதற்கான கவுரவக் கொலைகள் என்று கூச்சல் போடும் அயல் நாடான இந்தியாவில் இருந்து வந்த மாணவ மாணவிகள் பலரின் கலாச்சாரம் பற்றிய சிறு கண்ணோட்டமே இக்கட்டுரை.

**சம்பவம் 1**

அந்த மனிதர் 65 தாண்டிய ஜேர்மனிய இனத்தவர். அதாவது பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்ட வசதியான மனிதர். வயதின் காரணமாக செய்யப்பட்ட கண்பார்வைச் சிகிச்சையின் பின் இன்னும் சற்று அதிகமாக கண்பார்வை பாதிக்கப்பட்ட, பார்க்கும் திறனை இழந்து விடாத மனிதர். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக விடுமுறை நாட்களை இலங்கை இந்தியாவில் மட்டுமே களித்துக் கொண்டு, அந்தக் கலாச்சாரங்களை , உணவுவகைகளை அங்குள்ள மக்களின் அழகை , பண்பை மிக நேசிக்கும் ஆசியப் பெண் எனில் கை குலுக்கிக் கொள்ளக் கூட அவர்கள் பண்பாடு இடம் கொடுக்குமோ என்று யோசிக்கும் மனிதர். எனக்கு ஓரளவு அறிமுகமானவர். மனம் விட்டுப் பேசும், உலக நடப்பு விவாதிக்கும் நண்பர். அந்தப் பூங்காவில் ஓய்வாக நான் கொண்டு சென்ற வேலைகளில் கவனமாக இருந்த என் அருகில் வந்து அமர்ந்தார். தன் பெரிய வீட்டில் தனக்காக ஒரு பகுதியை தனியான வாசல் உள்ள வாழ்விடமாக ஒதுக்கிக் கொண்டு மிகுதியை அடிப்படைக் கட்டணச் செலவுகளை பூர்த்தி செய்யக் கூடிய அளவு குறைந்த வாடகை மட்டும் வாங்கிக் கொண்டு இந்திய மாணவிகளுக்கு வாடகைக்கு விட்டிருக்கும் மனிதர். வரத்து தேவை வாடகை மூலம் வருமானம் அல்ல அந்த வீட்டுச் சூழலில் தன் தனிமை போக்கப் பட வேண்டும். கல்விக்காலம் முடிய சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போகவேண்டிய நிலை இருந்தும் வழமையான பல மாணவிகள் போல அவர் வீட்டில் தங்கியுள்ள மாணவிகள் பலருக்கும் திரும்பித் தாய் நாட்டுக்குச் செல்வதில் விருப்பம் இல்லை. அப்படியாயின் அவர்கள் இங்கேயே நிரந்தரமாக ஒரு வேலையைத் தேடிக் கொண்டு தொடர்ந்து வேறு ஏதாவது படிப்பதாக விசாவை நீடிக்க முடியும். ஆங்கிலத்தை மட்டும் வைத்துக் கொண்டு டொச் மொழி தெரியாத இவர்கள் இவர்களது உயர்கல்விக்கு ஏற்ற வேலைகளை இங்கு தேடுவது சிரமமானது . ஆகவே அவர்கள் விரும்பாவிடினும் திரும்பிச் செல்லவேண்டிய நிலைப்பாடே நிர்ப்பந்தமாக

**"வெள்ளைக்காரர்களுக்கு கற்பு, ஒருத்தனோடு வாழ்க்கை அப்படி எல்லாம் ஒரு ஒழுங்கான கலாச்சாரம் உண்டா என்ன? இப்போது நான் தேவைப்படுகிறது அவளுக்கு எனக்கு அவள் மூலம் சில சலுகைகள் தேவைப்படுகின்றன கொடுத்து வாங்கல் அவ்வளவே."**

இருக்கையில், திரும்பிச் செல்லாமல் இருக்க அவர்களில் சிலர் எடுக்கத் துணியும் விபரீத முடிவுகள் தான் வேடிக்கையானது. வாடகை வீடு கொடுத்த அந்த மனிதரிடம் என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா உன் கண் தெரியாத குறைக்குக் கண்ணாக உன் வயோதிபத்துக்குத் துணையாக உன்னோடு இருக்கிறேன் என்று கேட்ட மாணவியின் வயது 23, தான் போட்ட திட்டத்தை அவள் பிடுங்கிக் கொண்டு வென்று விடப் போகிறாள் என சண்டை போட்டு விடயத்தை அம்பலத்துக்குக் கொண்டுவந்த மாணவியின் வயது 22 இந்தக் கேலிக் கூத்தைப் பார்த்து விக்கித்து நின்ற வேடிக்கையாகச் சிரித்த மாணவிகளும் உண்டு. இதனைச் சொல்லி விட்டு எனக்குத் தெரியும் தனியாக இருக்கும் வாரிசற்ற என் இறப்புக்குப் பின் என் சொத்துக்கள், வங்கிப் பணம், முக்கியமாக திருமணத்துக்குப் பின் கிடைக்கும் நிரந்தர வதிவிட உரிமை இவைதான் அவர்களுக்குத் தேவை. நான் இறந்த பின் அவளுக்குத் தேவையான அவளது நாட்டுக் காரனை இங்கு கூப்பிட்டுக் கொள்வாள் என்றார் அந்த மனிதர் . எப்படித் தெரியும் என்றேன். போட்ட சண்டையில் சேர்ந்து போட்ட திட்டம் எல்லாம் வெளியில் கக்கியதைப் பார்த்தேன் என்றார்.

ஆசிய நாடுகளை அதிலும் இலங்கை இந்திய கலாச்சாரப் பண்பாடுகளை அதிகம் விரும்புபவன் நான் இவர்கள் இவ்வளவு கேவலமாக அதை விலைபேசி வெளிநாட்டில் வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கும் வழிவகை ஒரு வித விபச்சாரத் தனமாக உள்ளது என்று சொன்னபோது காறித் துப்பவில்லை கண்கள் நடிப்பில்லாமல் கலங்கியிருந்தன. அந்த இடத்தில் நாம் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் எம்மைக் கடந்து சென்ற மாணவிகள் பலரின் திரும்பிப் போக விருப்பமில்லாத பலவிதமான குரல்களில் இதுவும் ஒன்று.

**சம்பவம் 2**

நான் வேலைபார்க்கும் நிறுவனத்துக்குள் அதிகளவில் உள்வாங்கப் பட்டிருக்கும் கல்லூரி விடுமுறைக் காலத்தில் மட்டும் வேலை பார்க்கும் மாணவ, மாணவிகள். வேலை மற்றும் இடைவேளை நேரங்களில் அவர்கள் ஒன்றாகக் கூடிக் கொள்வதும் அவர்களது கலகலப்பும் அழகானதும் எனக்கு மிகவும் பிடித்ததும் தான். ஆகவே வேலை நேரங்களிலும் வசதி கிடைக்கும் போது அவர்கள் பகுதியில் எப்போதும் என் பார்வை இருந்து கொண்டிருப்பதும் புதிதாக அதுவும் விடுமுறைக்கால வேலைக்கு வருபவர்களை அதிகளவில் தங்களுடன் சேர்த்துக் கொள்ள விரும்பாத, நட்புடன் நெருங்காத அநேக சக ஊழியர்கள் மத்தியில் இவர்களுடைய தேவைகள் வேலைகள் பற்றிய இரண்டு பகுதிக்கும் பாலமாக இருக்கும் பொறுப்பு என்னிடம் இருப்பதால் அவர்களுடன் நெருங்கிப் பேசவும் அவர்கள் நெருக்கமாக என்னோடு நட்புக் கொள்ளவும் வாய்ப்பான சந்தர்ப்பங்கள் அதிகம். அவர்களில் பொதுவில் கவனித்த ஒரு விடயம் இந்திய, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற இடங்களில் இருந்து வந்த மாணவர்கள் அதிகமானவரை மற்றைய வெள்ளைத்தோல் மாணவர்களிடம் இருந்து விலகி வேலைமறந்து சுவாரசியமாக மாணவிகளை பேசிப்பேசி தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருப்பார்கள். ஆரம்பம் அது வயதுக் கோளாறு என்றே தோன்றினும் போகப்போக அதன் ஆழத்தில் என்னவோ உறுத்தியது. மெல்ல மெல்ல கதை போட்டுப் பிடுங்க பிடுங்க வெளிவந்த விடயம் மனதுக்கு சற்று அருவருப்பும் மிக வெறுப்பும் தந்தது. இவர்களோடு நெருக்கமாகி சேர்ந்து ஒரு வாழ்க்கையை தொடங்கிவிட்டால் விசா பிரச்சனை தீர்ந்து விடும் திரும்பிப் போக வேண்டி நேராது என்பது தான் அவர்களின் பதிலில் மறைந்திருந்த அடியாழத் தொனி. அதிலும் ஒருவன் நேரடி வாக்குமூலமாகத் தந்த போது அதிர்ந்து போனது மனது. சாப்பாட்டு நேரம் கடந்த ஓய்வு நேரத்தில் எதிரில் வந்து அமர்ந்தான் அவன். வேலையிடம் தவிர அவனைப் பலமுறை பல இடங்களில் எனக்கு மிக அறிமுகமான ஜேர்மனிய இளம்பெண் ஒருவருடன் நட்பு எல்லை தாண்டிய சற்று நெருக்கத்தில் கண்டிருந்ததால் உனக்கு மெலானியை தெரியுமா என்றேன். சட்டென காரணமற்று அவன் முகம் இருண்டது. ஏதோ களவு கண்டுபிடிக்கப் பட்டது போல பார்வை தடுமாறியது. சும்மா சொல்லு. காதல் தானே என்றேன் வேடிக்கையும் கிண்டலுமாக. பதிலில்லாமல் எங்கோ பார்த்தான். சரி... மெலானியைப்பற்றி உனக்கு நன்றாகத் தெரியுமா என்றேன். ஆமாம் அவள் என்னுடன் கூடப்படிப்பவள் மற்றைய மாணவ மாணவிகளை விட ஆரம்பத்திலேயே என்னை நெருங்கியவள் என்றான்.

அவ்வளவே தானா புன்னகைத்தேன்.

இல்லை நான் அவளோடு தான் தங்கியிருக்கிறேன்.

அதாவது
லிவிங் டு கெதர்.
உன் செலவுகள் இந்த விடுமுறைக்கால வருமானத்துக்குள் கட்டுபடியாகுமா
மெலானியிடம் சொந்தமாக பிளாட் இருப்பதால் தங்குமிடச் செலவு என்னை அதிகம் தாக்குவதில்லை . மிகுதிக்கு இப்படி வேலை செய்வது போதும் வரும் போது கட்டாய வைப்பில் இட்ட தொகை அப்படியே உள்ளது. எக்ஸாம் பணம் கட்ட நேரும் கட்டிக் கொள்வேன் .
மெலானியை கட்டிக் கொண்டு இங்கேயே செற்றில்
ஆகிவிடப் போகிறாயா?
இங்கே செற்றில் ஆகும் விருப்பில் தான் படிப்பு முடிய அவளைக் கட்டிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.
உன் ஆசியக் குடும்பம் வேறு எதிர்பார்ப்புக்கள் வைத்திருப்பார்களே
அவர்கள் இப்படி ஒரு கல்யாணத்தை ஏற்க மாட்டார்கள் இதையும் நான் தொடர்ந்து வாழ்வதற்காக கட்டப் போவதில்லை. விசாவுக்காக.
மெலானி பாவம் இல்லையா
வெள்ளைக்காரர்களுக்கு கற்பு , ஒருத்தனோடு வாழ்க்கை அப்படி எல்லாம் ஒரு ஒழுங்கான கலாச்சாரம் உண்டா என்ன. இப்போது நான் தேவைப்படுகிறது அவளுக்கு எனக்கு அவள் மூலம் சில சலுகைகள் தேவைப்படுகின்றன கொடுத்து வாங்கல் அவ்வளவே. நான் அப்படி ஒரு வாழ்க்கை தேடிக் கொண்டால் என்னவர்களால் தாங்க முடியாது. என்னாலும் அப்படியோர் வாழ்க்கையை வாழ முடியாது. இங்கு என்னை அனுப்பி படிப்பிக்க என் குடும்பம் எவ்வளவு கஸ்ரப்பட்டு பணம் ஒதுக்கியது என்பதை நான் அறிவேன். நான் இங்கேயே வாழ்க்கையை தொடக்கி விட்டல் அந்தப் பணத்தை எப்படி திருப்பிச் செலுத்துவது. என் அன்பான குடும்பம் என்மீது வைத்த நம்பிக்கையை என்ன செய்வது
அப்போ அவர்கள் அனுப்பி படிப்பித்து வாங்கிய சான்றிதழையும் மெலானி மூலம் கிடைக்கப் போ-கும் வதிவிட உரிமையையும் கொண்டு அதிகமான விலைக்கு நீ விலை போகப் போகிறாய். பின் உன்னை அதிக விலை கொடுத்து வாங்கியவளுடன் இங்கு வந்து வாழப் போகிறாய் மெலானி பற்றி யோசித்தாயா?
அவர்களுக்கு இதெல்லாம் பெரிய விடயம் இல்லையே நான் போனால் நாளை இன்னொருவன்
சொன்னாளா உனக்கு
இல்லை அப்படித் தானே இங்கு நடை முறை.
கற்கவந்ததே இரண்டு வருடக் கல்வி அதில் ஒரு வருடத்துக்குள் இவ்வளவு அறிந்திருக்கிறாயே. உன் பார்வையில் அவர்கள் காதலற்ற , கனவுகள் இல்லாத , காமம் மட்டுமே கொண்டவர்கள். ஒரு துணையை நேசித்து அதனுடன் மட்டும் வாழ முடியாதவர்கள். என் பார்வையில் நீ செய்வது என்ன தெரியுமா உன் தேவைக்காக உன்னை , உடலை , மனச்சாட்சியை , விற்கும் விபசாரம் ஆண் விபச்சாரம்
என் வார்த்தைகள் அவனைக் குத்தியிருக்கலாம் அது பற்றி எந்த குற்ற உணர்வும் எனக்கில்லை காரணம் இந்தக் ஒருவ-னின் வாயில் ஒலித்தது பலரின் குரல் என்பதும் பாதைகள் மட்டுமே வேறு வேறு என்பதும் நான் கண்டிருக்கிறேன் .
அந்த மெலானி வசதியான குடும்பத்தைச் சேர்ந்த , விவாகரத்தான பெற்றாருக்குப் பிறந்த , பாசத்துக்கு , நிரந்தர குடும்ப அமைப்பு முறைக்கு ஏங்கும் ஒரு பெண். வாழ்க்கை பற்றிய ஆசியக் கனவுகள் அதில் ஏராளம். அவளது கற்பனைகள் பாட்டியாகி , பூட்டியாகி என்று கூட்டுக் குடும்ப ஆசையில் விரியும் . இந்தியத் திரைப்படங்களைப் பார்த்துப் பார்த்து அப்படி ஒரு வாழ்வுக்காக ஏங்கி ஆசியக் கணவனுக்காய் காத்திருப்பவள் இவனது மனநிலை அறிந்தால் அவளது மனதில் அது எத்தனை பெரிய தாக்கமாக அமையும் என்று நினைத்துப் பார்த்தேன் ஆக மொத்தத்தில் கலாச்சாரம் கலாச்சாரம் என்று வாய்கிழியக் கத்திக் கொண்டிருக்கும் நாம் தான் வசதிகளுக்காகவும் வாய்ப்புக்களுக்காகவும் அவைகளை கேவலமாக விலைபேசிக் கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது.

பாலன் தோழரின்..

# லண்டனில் பிள்ளையார்

ஐந்தாம் அத்தியாயம்

பிள்ளையார் ஏறியதும் கார் புறப்பட்டது.

கார் ஓட்டிய பெண்மணி தன்பாட்டிலேயே நடந்த சம்பவம் பற்றி தனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லத் தொடங்கினாள்.

லண்டனில் இப்படி பல கோஸ்டிகள் இருப்பதாகவும் அவர்களுக்கிடையே இவ்வாறு அடிக்கடி சண்டைகள் நடப்பதாகவும் அவை கொலைகளில் முடிந்திருப்பதாகவும் சொன்னாள்.

“இக் கொலைகளில் பெரும்பாலும் அப்பாவிகளே பலியாகின்றனர். இன்றும் கூட இறந்த அந்தப் பையன் மிகவும் நல்லவன். அண்மையில்தான் லண்டனுக்கு வந்தவன். இன்னும் வந்த கடன் காசு கொடுத்து முடியவில்லை. இவனை நம்பி நாலு குமர்ச் சகோதரங்கள் நாட்டில் இருக்குதுகள். இவன் இங்கு அநியாயமாகச் செத்துப்போயிட்டான். இதை அறிந்ததும் அதுகள் மனம் எப்படி வேதனைப்படும்? இந்த குறுக்காலபோன நாய்களால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. பெண்பிள்ளைகள் றோட்டால போகமுடியவில்லை. கையைப் பிடித்து இழுக்கிறாங்கள். கடையில வந்து கள்ளமட்டை போடு இல்லையேல் வெட்டுவம் என்று வாளைக் காட்டுறாங்கள். ஒரு நிகழ்ச்சி நிம்மதியாக நடத்தமுடியவில்லை. குடித்துப்போட்டுவந்து அடிபடுகிறாங்க. இதைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை? இந்த இயக்கங்களும் மாதம் தவறாமல் வந்து காசு வாங்குறாங்க. ஆனால் இதை தடுத்து நிறுத்தமாட்டாங்கள். நாட்டில மாங்காய் தேங்காய் களவெடுத்தவனைக்கூட பிடித்து சுடுகிறாங்கள். இங்கே இந்தக் காடையரைக் கண்டும் காணாத மாதிரி திரியிறாங்கள். இயக்கத்திற்கும் இவங்களுக்கும் லிங்க் இருக்குது என்று சிலர் சொல்லுகினம். அது உண்மைதான் போலக்கிடக்கு” என்று கவலையுடனும் ஏக்கத்துடனும் சொல்லிமுடித்தாள்.

பிள்ளையாரும் மிகுந்த மனவருத்தத்துடன் இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்.

நாட்டில மக்கள் கஸ்டப்பட்டுப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் போராட்டத்தைக் காட்டி இங்கே அகதி அடைக்கலம் பெற்றுவிட்டு பின் அதை மறந்து பல ஆயிரம் செலவு செய்து பிறந்தநாள் கொண்டாடுவதும் கோஸ்டி சேர்ந்து சண்டை பிடிப்பதும் இதை நினைக்கவே பிள்ளையாருக்கு வெட்கமாக இருந்தது.

இதனடுவே பிள்ளையாரின் ஊர் பேர் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்ட டீச்சர் தன்னைப்பற்றி சொல்லத்தொடங்கினார்.

அவர் தான் ஒரு டான்ஸ் டீச்சர் என்றும் பின்னால் இருக்கும் இருவரும் தனது பிள்ளைகள் என்றும் கூறினார்.

பிள்ளையார் திரும்பிப் பிள்ளைகளைப் பார்த்து “பெயர் என்ன? எங்கே எத்தனையாம் கிளாஸ் படிக்கிறியள்?” என்று கேட்டார்.

அதுகள் இரண்டும் ஒன்றும் புரியாமல் முழித்துக்கொண்டு இருந்ததுகள்.

**"இயக்கத்தில் இருந்தபோது தலைமை செய்த சில உட்கொலைகளை கண்டித்து நியாயம் கேட்டிருக்கிறார். இதனால் எரிச்சல் அடைந்த தலைமை இவரை மாற்று இயக்க உளவாளி என்று குற்றம் சுமத்தி கொலை செய்ய முயன்றிருக்கிறார்கள். இதை அறிந்ததும் கூட இருந்த சில தோழர்களின் உதவியுடன் தப்பி லண்டன் வந்திருக்கின்றார்."**

உடனே டீச்சர் "அவர்களுக்கு தமிழ் தெரியாது. ஆங்கிலம் மட்டும்தான் தெரியும்" என்றார்.

இதைக்கேட்டதும் பிள்ளையாருக்கு ஆச்சரியம்.

பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாமல் இருப்பது ஆச்சரியம் இல்லை. ஏனெனில் இன்று வெளிநாடுகளில் பிறந்து வளரும் பல பிள்ளைகள் தமிழ் தெரியாமலே இருக்கின்றன. ஆனால் தம் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது என்பதை பெருமையாக சொல்லும் தாயை இப்பதான் பிள்ளையார் பார்த்ததால் அவருக்கு மிகவும் ஆச்சரியம்.

அதனால் "இப்படி தமிழ் தெரியாது என்று சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என்று நேரிடையாக அவரிடம் கேட்டார்.

"இதில் என்ன வெட்கம் ? அவர்கள் ஒருபோதும் எமது நாட்டிற்குச் சென்று வாழப்போவதில்லை. அவர்கள் லண்டனிலேயே வாழப்போகிறார்கள். எனவே அவர்களுக்கு தமிழ் தேவையில்லை" என்று சாதாரணமாக டீச்சர் பதில் சொன்னார்.

பிள்ளையார் உணர்ச்சிவசப்பட்டாலும் டீச்சர் சர்வசாதாரணமாக சொன்னதிலும் நியாயம் இருப்பதாகவேபட்டது.

"பிள்ளைகளுக்குப் பசிக்கிறது. இனி வீட்டுக்குப்போய் சமைத்துச்சாப்பிட நேரம் போதாது. அதனால அருகில் இருக்கும் மக்னால்ட் இல் சாப்பிட்டுச் செல்லலாம். எனவே நீங்களும் இன்று எங்கள் விருந்தாளியாக எங்களுடன் சாப்பிட வாருங்கள்" என்று டீச்சர் அன்பாக அழைத்தார்.

பிள்ளையாருக்கு அவர் அழைப்பை தட்ட முடியவில்லை. சரி என்று சென்றார்.

பிள்ளையார் அவர்களுடன் சாப்பிடுவதை விட அவரகளிடம் கதை கேட்பதிலேயே மிகவும் ஆர்வமாக இருந்தார்.

சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது "உங்கள் கணவர் எங்கே? அவர் ஏன் உங்கள்கூட வரவில்லை"என பிள்ளையார் டீச்சரிடம் கேட்டபோது சில நிமிடம் மௌனமாக இருந்த டீச்சர் பின் மெதுவாக சொல்லத்தொடங்கினார்.

"அவருக்கும் எனக்கும் பிரச்சனை. அதனால விவாகரத்துப் பெற்று நானும் பிள்ளைகளும் தனியாக வாழ்கிறோம்."என்றார்.

இதைக்கேட்டதும் ஆச்சரியம் அடைந்த பிள்ளையார் "பார்த்தால் மகாலட்சுமி மாதிரி இருக்கிறீர்கள். உங்களுடன் எப்படி உங்கள் கணவர் பிரச்சனைப்பட்டார்.?" என்று வேதனையுடன் கேட்டார்.

அதற்கு டீச்சர் "அவர் ஊரில் ஒரு இயக்கத்தில் இருந்திருக்கிறார். இயக்கத்தில்இருந்தபோதுதலைமைசெய்தசிலஉட்கொலைகளை கண்டித்து நியாயம் கேட்டிருக்கிறார். இதனால் எரிச்சல் அடைந்த தலைமை இவரை மாற்று இயக்க உளவாளி என்று குற்றம் சுமத்தி கொலை செய்ய முயன்றிருக்கிறார்கள். இதை அறிந்ததும் கூட இருந்த சில தோழர்களின் உதவியுடன் தப்பி லண்டன் வந்திருக்கின்றார். இங்கு வந்ததும் சில நாட்கள் இயக்கம் அரசியல் என்று அலைந்து திரிந்தார். ஆனால் இங்கு இருந்த பலபேர் சுயநலத்துடன் தங்கள் பாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அதுமட்டுமல்ல இவரின் அரசியல் வேலைகளையும் நக்கல் பண்ணி கிண்டல் அடித்தனர். இவரும் இதுதான் சாக்கென்று பேசாமல் அரசியல் வேலைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு தன்பாட்டை பார்க்க ஆரம்பித்துவிட்டார். ஒரு பெற்றோல்கராஜ்ல் வேலை பார்த்துக்கொண்டு படித்து அக்கவுண்டன் ஆனார். மகன் அக்கவுண்டன் ஆகிவிட்டார் என்று அறிந்தவுடன் வழக்கம்போல் இவரின் பெற்றோரும் இவருக்கு கலியாணம் பேசினார்கள். லண்டன் மாப்பிளை அதுவும் அக்கவுண்டன் மாப்பிள்ளை என்று அறிந்ததும் எனது பெற்றோர் கேட்ட சீதனம் அதுவும் கொழுத்த சீதனம் கொடுத்து என்னைக் கட்டிக்கொடுத்தனர். மற்றவர்கள்போல் நானும் லண்டன் கனவுகளுடன் இங்கு வந்தேன். ஆனால் இங்கு வந்தபின்னர்தான் தெரிந்தது படித்த படிப்புக்குரிய வேலை இவர் செய்யவில்லை. மாறாக பகலில் ஒரு ரியல் எஸ்டேட் கம்பனியில் கிளார்க்காக வேலை செய்தார். வாங்கிய வீட்டு மோகேஜ் கட்ட சம்பளம் போதாமையினால் இரவில் கப் ஓடினார். திடீரென ஊரில் தாய் தகப்பன் காசு கேட்டால் கடன்பட்டு அனுப்பிவிட்டு பின் அந்தக் கடனைக் கொடுப்பதற்காக பெற்றோல் கராஜ்ஜில் பாட் டைம் வேலை செய்வார். அக்கவுண்டன் என்று பொய் சொல்லிக் கலியாணம் கட்டிவிட்டார்களே என்று ஆரம்பத்தில்

எனக்கும் கொஞ்சம் ஆத்திரம் இருந்தது. ஆனால் இங்குள்ள நிறவெறி காரணமாக பல ஏசியன்கள் படித்த படிப்புக்குரிய வேலை கிடைக்காமல் சாதாரண வேலை செய்வதைப் பார்த்ததும் நான் சமாதானம் கொண்டேன். அதுமாத்திரமல்ல அவர் தான் எவ்வளவு கஸ்டப்பட்டாலும் என்னையும் பிள்ளைகளையும் எந்தக்குறையுமின்றி வைத்திருந்தார். அதுமட்டுமல்ல எங்கள் மீது மிகவும் அன்பு வைத்திருந்தார். இதனால் அவர்மீது எனக்கு பரிவு ஏற்பட்டது. இப்படிப்பட்டவருடன் ஏன் பிரச்சனை வந்தது? ஏன் நாங்கள் பிரிந்தோம் ? என்று உங்களுக்கு ஆச்சரியம் வரலாம். அதையும் உங்களுக்கு நான் சொல்கிறேன்" என்றார்.

"அவர் இயக்கத்தை விட்டுப் பிரிந்து வந்தாலும் இயக்கத்தில் இருந்தபோது படித்த சித்தாந்தங்கள் கடைப்பிடித்த கொள்கைகள் என்பனவற்றை முழுமையாக விடவில்லை. தமிழ்மொழி மீதுகொண்ட பற்று காரணமாக பிள்ளைகளுக்கு இன்பத்தமிழன் தேன்மொழி என்று பெயர் வைத்தார்.அவர்கள் தமிழ் படிக்கவேண்டும் தமிழில் பேசவேண்டும் தமிழ்க்கலாச்சாரத்தில் வளரவேண்டும் என்று விரும்பினார். ஆனால் பிள்ளைகள் வளர வளர இவரின் இவ் விருப்பத்திற்கு மாறாக நடந்தனர். இதனால் சிறிது சிறிதாக பிரச்சனைகள் ஆரம்பித்தன. தன் பிள்ளைகள் தன் பேச்சைக்கேட்க வில்லையே என்ற கோபத்தில் அவரும் வர வர மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளத் தொடங்கினார். பிள்ளைகள் பள்ளியில் படிப்பது ஆங்கிலத்தில் .அவர்கள் பள்ளி நண்பர்கள் ஆங்கிலேயர்கள் எனவே அவர்கள் அதிக நேரம் ஆங்கில மொழியைப்பயன்படுத்துவதால் ஆங்கிலத்தையே பின்பற்றுகிறார்கள். தமிழ் அவர்களுக்கு மேலதிக சுமையாகின்றது. காலப்போக்கில் தமிழை மறந்துவிடுகின்றனர். என்னைப்பொறுத்தவரையில் பிள்ளைகள் இனி ஒருபோதும் இலங்கை சென்று வாழப்போவதில்லை. அவர்கள் இங்குதான் இருக்கப்போகின்றனர். எனவே அவர்களுக்கு தமிழ் தேவையில்லை என்பதே என் கருத்தாகும்".

"நான் வீட்டின் பின் பக்கத்தில் இருக்கும் நிலத்தில் பூக்கன்றுகள் வளர்ப்பேன். புல் வளர்ப்பேன். அவர் இது வீண் செலவு என்று ஏசுவார். இதற்குப்பதிலாக மிளகாய்கன்று நட்டால் கறிக்கு பிஞ்சுமிளகாய்யாவது வரும் என்பார். பிள்ளைகள் ஆசையாக மீன் வளர்த்தால் அதற்கும் ஏசுவார். மீன்தொட்டிக்கு செலவு செய்யும் பணத்தை நாட்டுக்கு அனுப்பினால் ஒரு அகதிக் குழந்தைக்கு பால்மா வாங்கலாம் அல்லது உடுப்பு வாங்கலாம் என்பார். உண்மைதான் அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஆனால் சுற்றம் இருக்கும் அனைவரும் நடப்பது போலத்தானே பிள்ளைகளும் நடக்க முயல்வார்கள். மற்ற பிள்ளைகள் ஜீன்ஸ் போட்டு திரியும்போது இவர் தனது பிள்ளைகளை பாவாடை சட்டை போட்டு போகும்படி கூறுவார். பாவாடை சட்டை போட்டுப்போனால் மற்றப்பிள்ளைகள் பகிடி பண்ணுதுகள் என்று இவர்கள் வெளியே போவதில்லை."

"ஒருநாள் மகன் நண்பர்களுடன் சேர்ந்து சிகரெட் குடித்திருக்கிறான். இதை இவர் கண்டுவிட்டார். உடனே அவனை இழுத்து வந்து அடி அடியென்று அடித்தார். பொறுத்துப்பொறுத்துப் பார்த்த அவன் அவர் கையை தட்டிவிட்டு " இனி அடித்தால் பொலிஸ்க்கு சொல்வேன்" என்றான். இந்த நாட்டு சட்டம் பெற்றோர் பிள்ளைகளை அடிப்பதை அனுமதிக்காது. அடித்தால் பிடித்து சிறையில் அடைத்துவிடுவார்கள். இதனால் பயந்துபோன அவர் அடிப்பதை நிறுத்திவிட்டு " ஓ நீ அந்தளவுக்கு வந்துவிட்டாயா? இனி நீ என் பிள்ளையில்லை. எக்கேடு கெட்டுப்போனாலும் எனக்குக் கவலையில்லை" என்று கூறியவர் அதன்பின் அவனுடன் பேசுவதேயில்லை. இதேபோல் இன்னொருநாள் மகளுக்கு அடித்தார். தான் பஸ்சில் போகும்போது இவள் பள்ளிக்குமுன்னால ஒரு வெள்ளைக்கார பொடியனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டுக் கொண்டிருக்கிறாள் என்றார். இவளை இன்றைக்கு இரண்டு துண்டாக வெட்டினால்தான் தன் ஆத்திரம் அடங்கும் என்று கத்திக்கொண்டிருந்தார். இதனால் பயந்துபோன மகள் உடனே பொலிஸ்க்கு போன் பண்ணிவிட்டாள். வீட்டுக்கு வந்த பொலிஸ் அவரை பிடித்துப்போய் சிறையில் அடைத்தது. பள்ளியில் தன் பிரெண்ட்ஸ் எல்லோருக்கும் போய்பிரெண்ட் இருப்பதாகவும் தனக்கு போய்பிரெண்ட் இல்லை என்று தெரிந்ததும் தன்னை எல்லோரும் ஏதோ குறையுள்ள பெண்(அலி) என்று கிண்டல் செய்கிறார்கள். இதனால்தான் வேறுவழியின்றி தன்னுடன் கூடப்படிக்கும் வெள்ளைக்காரப்பொடியனுடன் திரிவதாக அவள் கூறினாள். அவளுக்கு இருக்கும் தர்மசங்கடமான நிலையினை அவர் உணரவில்லை. சிறையால வந்த அவர் வீட்டுக்கு வரவில்லை. தன்னுடைய நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கினார். வேலைக்கும் போவதில்லை. கண்டபடி குடித்தார். தனக்கு மானம் போய்விட்டது என்றும் தன்னை தலைகுனிய வைத்த பிள்ளைகளையும் என்னையும் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக கூறித்திரிந்தார். என்னை வந்து சந்திப்பவர்களை அல்லது நான் போகும் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளுக்கு போன் செய்து மிரட்டுவார். இரவில் அவர்களின் வீடுகளுக்கு கல் எறிந்து யன்னல் கண்ணாடிகளை உடைப்பார். அவர்களில் சிலர் பொலிஸில் முறைப்பாடு செய்ததால் பொலிஸ் அவரை பிடித்துச் சென்றது. அவருக்கு விசர் பிடித்துவிட்டது என்று சொல்லி சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். நானும் பொறுத்துப் பொறுத்து பார்த்து இறுதியில் வேறு வழியின்றி விவாகரத்துப் பெற்றுக்கொண்டேன்."

"என்னைப்பொறுத்தவரையில் லண்டனில் இருந்தால் லண்டன் வாழ்க்கை வாழவேண்டும். தமிழ்கலாச்சாரம் வேண்டும் என்றால் போய் ஈழத்தில் வாழவேண்டும். அதைவிடுத்து ஈழம் என்றால் என்னவென்று தெரியாத பிள்ளைகள்மேல் வீணாக

**"ஈழம் என்றால் என்னவென்று தெரியாத பிள்ளைகள் மேல் வீணாக பாரத்தை சுமத்தக்கூடாது. இதனால் அவர்களின் வாழ்வும் மண்ணாகி நாங்களும் வீணாக அழிகிறோம்."**

பாரத்தை சுமத்தக்கூடாது. இதனால் அவர்களின் வாழ்வும் மண்ணாகி நாங்களும் வீணாக அழிகிறோம்." என்றார் டீச்சர்.

டீச்சர் இக்கதையை சொல்லிக்கொண்டிருக்கும்போது அதைப்பற்றி எதையும் பொருட்படுத்தாமல் மகள் போனில் தன் போய்பிரண்டுடன் அரட்டை அடித்துக்கொண்டிருந்தாள்.

திடீரென தாயைத்திரும்பிப்பார்த்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை டேட்டிங் போக தன் போய்பிரெண்ட் கூப்பிடுவதாகவும் போகலாமா என்று கேட்டாள்.

தாயும் "அதற்கென்ன போய்வா.ஆனால் மறக்காமல் கருத்தடை சாதனங்களையும் எடுத்துப் போ" என்றார்.

அதேநேரம் அருகில் இருந்த மகன் சர்வசாதாரணமாக சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான். அவனைப்பார்த்து "அதிகம் குடிக்காதே என்று உனக்கு எத்தனை தடவை சொல்லுறது. குறைத்துக் குடி ராசா" என்றார்.

போய்பிரெண்ட் உடன் போக மகள் தைரியமாக தாயிடம் கேட்கிறாள். தாயும் சம்மதம் தெரிவிப்பதுமட்டுமன்றி கருத்தடை சாதனமும் கொண்டு செல்லும்படி கூறுகிறார்.

மகன் தன் முன்னால் சிகரெட் பிடிப்பதையிட்டு தாய் கோபம் அடையவில்லை. மாறாக குறைத்துக் குடிக்கும்படி அட்வைஸ் செய்கிறார்.

இதை பார்த்துக்கொண்டிருந்த பிள்ளையாருக்கு ஆச்சரியமாக இருந்தது. தலை சுற்றுவதுபோல் இருந்தது. இதை புரிந்துகொண்ட டீச்சர் " உங்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கலாம். என்னைப்பொறுத்தவரையில் நான் எதையும் பிரற்றிக்கலாக பார்க்கிறேன். என் கணவர்போல் வீண்பிடிவாதம் பிடித்து என் பிள்ளைகளை இழக்க நான் விரும்பவில்லை" என்றார்.

பிள்ளையாருக்கு இதில் யாரைப் பிழை என்று சொல்வது என்று புரியவில்லை. எல்லோரிலும் ஒரு நியாயம் இருப்பதாகவே தெரிந்தது. அதனால் எதுவும் சொல்லாது மௌனமாக இருந்தார்.

பின் "ஏன் நீங்கள் இன்னொரு திருமணம் செய்ய முயலவில்லை" என பிள்ளையார் கேட்டார்.

அதற்கு டீச்சர் " கணவரை விட்டுப் பிரிந்தபோது பிள்ளைகளை எப்படி வளர்க்கப்போகிறேன் ? வீட்டுச்செலவை எப்படி சமாளிப்பது என ஏங்கினேன். நல்லவேளையாக நான் படித்த சங்கீதமும் டான்ஸ்மும் எனக்கு கைகொடுத்தன. முதலில் எனக்கு தெரிந்தவர்களின் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுத்தேன். நாளடைவில் அதைப் பார்த்து பலர் வந்தனர். இப்போது சமாளிக்கமுடியாமல் சிலரை திருப்பி அனுப்புகிறேன். அந்தளவுக்கு அதிக கூட்டம் வருகின்றது. இப்படி படிக்க வந்தவர்களில் ஒரு இளைஞன் என் பாட்டிற்கு மிருதங்கம் வாசிப்பான். ஒரு நாள் அவன் மிருதங்கம் வாசிக்கும்போது ரிவி யில் அபூர்வராகங்கள் படம் ஓடியது. அதில் பாட்டுப்பாடும் பாடகியும் மிருதங்கம் வாசிக்கும் இளைஞனும் ராகமும் தாளமும் இணைந்தது எனக்குறிப்பிட்டு காதல் செய்வதாக காட்டுவார்கள். அந்தப் படம் எங்கள் இருவர் மனதிலும் தாக்கத்தைக் கொடுத்தது. இது எங்களுக்குள் ஒரு உறவை உருவாக்கியது. அவனுக்கு என்னில் பாதி வயது. அவன் சாதிவேறு .என் சாதி வேறு. மதம்கூட வேறு வேறு. இருந்தும்கூட நான் இது ஒரு புனிதமான கலைக் காதல் என்று நம்பினேன். ஆனால் அவன் அவ்வாறு நினைக்கவில்லை. அவன் தனக்கு விசா கிடைப்பதற்காகவே என்னை பயன்படுத்த எண்ணியிருந்தான். இதை அறிந்துகொண்டதும் நான் மிகவும் கவலை கொண்டேன். அவனுடைய தாயார் இலங்கையில் பிரபல ரி.வி அறிவிப்பாளர். அவர் இதை அறிந்ததும் உடனே இங்கே வந்து தனது செல்வாக்கைப்பயன்படுத்தி தனது மகனுக்கு வேறொரு பெண்ணை திருமணம் செய்து வைத்தார். அதுமட்டுமன்றி நான் தன் மகனை கடத்திக்கொண்டுபோக திட்டம் போடுவதாக பொலிசில் முறைப்பாடு செய்தார். இதனை அறிந்த இன்னொரு டான்ஸ் டீச்சரின் கணவர் தனது பத்திரிகையில் " படிக்க வந்த மாணவனுடன் டான்ஸ் டீச்சர் காதல் சல்லாபம். வயது வந்த பிள்ளைகள் இருந்தும் தாய் மாணவனுடன் ஓட்டம்" என தலைப்பிட்டு என்மீது சேறு பூசினார். என் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தினார். இதனால் நான் மிகவும் சங்கடப்பட்டேன். குறிப்பாக என் பிள்ளைகள் என்னை வெறுத்துவிடுவார்களோ என பயந்தேன். நல்லவேளையாக அப்படி நடக்கவில்லை. மாறாக அவர்கள் " எங்களுக்கு அம்மா முக்கியம். அம்மாவின் சந்தோசமும் முக்கியம். இன்னொரு கலியாணம் செய்வது உங்களுக்கு சந்தோசம் கொடுக்குமாயின் நீங்கள் தாராளமாக செய்யலாம். நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டோம்" என்று கூறி எனக்கு பெரிதும் ஆறுதலாக இருந்தனர். அந்நேரம் அவர்கள் இவ்வாறு ஆறுதலாக இருந்திராவிடின் நான் பையித்தியக்காரியாகியிருப்பேன். எனது பெயருக்கு களங்கம் ஏற்பட்டதால் படிக்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. நான் என்னசெய்வது என்று தெரியாது திகைத்து நின்றவேளை எனது நிலைகண்டு அனுதாபம் கொண்ட இந்திய புகைப்பட கலைஞர் ஒருவரின் உதவியினால் இந்தியாவிலிருந்து சில புகழ்பெற்ற கலைஞர்களை வரவழைத்து என்னுடன் இணைத்து நிகழ்ச்சி நடத்தினேன். இது நல்ல பாராட்டைப் பெற்றதால் எனக்கு மீண்டும் மதிப்பு ஏற்பட்டது. இப்போது நான் எந்தக்குறையும் இன்றி சந்தோசமாக இருக்கிறேன்"என்றார்.

டீச்சரின் கதையைக் கேட்டுக்கொண்டிருந்ததில் பிள்ளையாருக்கு நேரம் போனது தெரியவில்லை. அடுத்த நாள் வேலைக்கு ஒரு இடத்திற்கு போகவேண்டும் என்பது நினைவுக்கு வந்ததும் இதனை டீச்சரிடம் கூறி தன்னை உடனே வீட்டில் கொண்டுபோய் விடும்படி கேட்டார்.

பிள்ளையார் கேட்டபடி தாமதம் இன்றி அவர் இருக்கும் வீட்டில் கொண்டுபோய் இறக்கிவிட்டார் டீச்சர்.




முகடு என்ற பெயரில் சஞ்சிகையாகவும், இணையதளத்தின் ஊடாகவும் வந்து கொண்டிருக்கின்றது. இந்தக் குழுவினரால் முகடு சஞ்சிகை வெளியீட்டு விழாவை நடத்த இருக்கின்றார்கள். இந்த விழா நல்ல முறையில் நடக்கவும், முகடு சஞ்சிகை மென்மேலும் வளரவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். புலம்பெயர் நாட்டில் எத்தனையோ சஞ்சிகைகள் வந்திருந்திருக்கின்றன. ஆனால் அந்தச் சஞ்சிகைகள் பல இல்லாது போய்விட்டுள்ளது. மக்களின் வாசிப்புப் பழக்கம் என்பது அற்றுள்ள இந்த வேளையில் இவ்வாறு சஞ்சிகை கொண்டுவருவது மிகவும் சவாலான விடயமே. இந்தச் சவாலை ஏற்றுக் கொண்டதற்கும் சஞ்சிகைக் குழுவினருக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

கடந்த இரண்டு வருடங்களில் 11 சஞ்சிகைகள் இன்றுவரை வெளிவந்துள்ளதுடன், 3மாதங்களேயான இணையதளத்திலும் வெளியிடுகின்றார்கள். முகடுசஞ்சிகை பற்றிய மதிப்பீடு கொடுக்கவில்லை. காரணம் முகடு சஞ்சிகையில் வந்த ஆக்கம் பற்றிய போதியபரீட்சையம் என்பது இல்லை. ஆனால் இந்தச் சஞ்சிகையின் ஊடாக புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்துக் கொள்ள முடியும். புதிய எழுத்தாளர்கள் யாம்பவான்களின் அங்கீகாரத்திற்கு காத்திருக்காமல் அவர்களுக்கான தளமாக இது அமைய வேண்டும். இதன் ஊடாக புதியவர்களை ஊக்குவிக்க முடியும். மக்களின் வாசிப்புப் பழக்கத்தையும் ஊக்குவிக்க முடியும்.இலக்கியம் என்பது மக்களுக்கானது என்ற அடிப்படையில் இந்த சஞ்சிகை செல்ல வேண்டும் என்பது தாழ்மையான வேண்டு கோள்.இன்றைய புலம்பெயர் அரசியல் சூழல், தாய்நாட்டின் ஆக்கிரமிப்புப் சூழலில் உள்ள அரசியல், சமூகப் பொருளாதார நிலையை அறிவாற்றல் மூலம் சமூகத்தினை அறிவியல் ரீதியாக சிந்திக்க இந்த சஞ்சிகை பணிபுரிய முடியும். இந்தச் செயற்பாட்டைச் செய்வார்கள் என்று நம்புவோம். இதில் குறிப்பாக தலைவர் பிரபாகரன் என்று போற்றும் இளையோரைக் கொண்டவர்கள் என்பதால் தொடர்ச்சியாக அவர்களின் இதயதாகத்தினை கொண்டு செல்லும் சக்தியாக இவர்கள் இருப்பார்கள் என்று நம்பிக்கை உண்டு. ஆக்கிரமிக்கப்பட்ட தேசத்தின் நிலை, சமூகச் சீர்கேடுகள், பிற்போக்கு (ஆணாதிக்க, சாதி, மத, பிரதேசவெறுப்பு) தன்மைகள் கேள்விக்குள்ளாக்குவதன் ஊடாக இந்தச் சஞ்சிகை சமூகத்தினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றிட வாழ்த்துக்கள்.

**வேலன்**

GANAPATHY distribution

# கணபதி

## பணப்பரிமாற்றச் சேவைகள்

Ria Money Transfer

WESTERN UNION

TEMPO MONEY TRANSFER

இலங்கைக்கு அதிகூடிய பெறுமதி

வர்த்தக விளம்பரங்கள்

இலட்சினை வடிவமைப்பு

இணையத்தள வடிவமைப்பு

சீருடை வடிவமைப்பு

வர்த்தக நிறுவன பெயர்ப்பலகை வடிவமைப்பு



IBC தமிழ்

தொலைக்காட்சி வர்த்தக விளம்பர தொடர்புகளுக்கு 06 35 30 76 71

Lebara play

Lebara Play சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்



71 , Rue Louis Blanc 75010 Paris

Tél : 01 77 12 30 21

2 La Chapelle

Paris Gare du Nord 7 5 RER B D